REGISTERED NO. M. 1434, தனிப்பிரதி அணா 2



# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.


நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, இலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரூ3-8-0.
சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்,

## மாதம் மும்முறைப் பதிப்பு.

"கண்ணுடைய ரேன்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

**சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!**

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன்.
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4.] துந்துபிஹு தைமீ 8உ ஞாயிற்றுக்கிழமை (அருப்புக்கோட்டை) 1923ஹு ஜனவரிமீ 21உ. [இதழ் 15


## சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல்! இனிய நாவல்
மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும், பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவை யோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்றோரும், மற்றோரும் கவித்து கொண்டாடப்பெற்றது. ஆண், பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணா 12, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

---

## அமரர் புராணம்.

ஒப்புயர் குலாபிமானியாய் சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் வகித்துக் காலஞ் சென்ற மேதாவி G. S. கொர்நேலியூஸ் நாடார் அவர்கள் இயற்றிய அரிய நூல். சான்றோர் குலப் பெருமையை வெகு தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் எவரும் இல்லை 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம் சில பிரதிகளே கையிருப்பு. விலை ரூ 2—8—0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்.—

ஸ்ரீமதி பூரணம் கொர்நேலியூஸ் அம்மாள்,
காசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.

---

அநேக பத்திரிகைகளாலும் கற்றோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டது எது?

## ஆநந்தமகிளா.

அநேக சித்திரப் படங்களுடன் கூடியது. மூன்றாம் பதிப்பு.

இச் சிறந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய பல நூல்களில் ஒன்று. இதில் ஸ்திரீ புருஷர்களின் அவயவ அமைப்புகள், பொருத்தங்கள், உலக இன்பத்தையடையும் பல நல்வழிகள், தேகாரோக்கிய விதிகள், சந்தான சந்தோஷ ஹேதுக்களும் அவற்றையடையும் விதங்களும், பூர்வீக சந்தோஷ சல்லாப அனுஷ்டா முறைகளும் வெகு தெளிவாய் எடுத்துரைப்பது. விலை 1—8—0.

விலாசம். ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.

---



## ஆஹா! நல்ல சாப்பாடு.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பிகிளப் முதலியவைகள் தக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லக்கேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் கீழூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F. S. பெரையரா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரொப்ரைட்டர்கள் { எஸ். எஸ். கருப்பையா நாடார்.
விருதுபட்டி. எஸ். ராமசாமி நாடார்

---

புதியசாலை! புதியசாலை!!

நாடார்குல மித்திரன்

## புத்தகசாலை.

புதுவருஷத்தைமுன்னிட்டு விலையைக் குறைக்கப்பட்டிருக்கிறது.

புத்தக விபரம்.

| | |
|---|---|
| அஸரியா நாடார் ஜீவிய சரித்திரம் | 0—8—0 |
| மகாமாயன் நாவல் | 0—9—0 |
| சௌந்திரகாந்தி நாவல் | 0—12—0 |
| அஸரியா நாடார் போட்டோ படம் | 0—3—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம் | 0—1—6 |
| நடராஜப் பதிகம் | (—1—6 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து | 0—1—6 |
| செல்வரசக் கீர்த்தனை | 0—3—0 |
| நாடார் மகாஜன சங்கீத மஞ்சரி | 0—4—0 |
| 5-வது நாடார் மகாஜன சங்க கான்பரன்ஸ் ரிப்போர்டு | 0—4—0 |
| நமது குலத்தொழில் யாது | 0—5—0 |

குறிப்பு:—8-அணாவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது. வீ. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மொத்தமாக வாங்குவோர்க்கு தக்ககமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

நாடார்குல மித்திரன் "புத்தகசாலை"
நாடார் ஹைஸ்கூல் ரோடு,
அருப்புக்கோட்டை.

---

பரமன்குறிச்சி

## நாடார் உயர்தர எலிமெண்டரி பாடசாலை.

நாடார்குல சிகாமணிகாள்! பரமன்குறிச்சி நாடார்கள் நடத்திவரும் இப்பாடசாலைக்கு கட்டடங்களுக்காக 5000 ரூ தேவையாயிருக்கிறது. நம் குல முன்னேற்றத்தைக் கருதிய யாவரும் தங்களால் இயன்ற உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். பினாங், சிங்கப்பூர், ஐக்யமலாயு நாட்டுச் சகோதரர்கள் ஜாசின் ஸ்ரீமான் த. சு. மு. பெருமாள் நாடாரவர்கள் வசமும், பர்மாவில் வசிக்கும் நண்பர்கள் ரங்கூன் பெரிய போஸ்டு ஆபீஸ் மகா-ள-ள-ஸ்ரீ N. சாமுவேல் நாடாரவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ N. சுவாமியடியான் நாடாரவர்கள் வசமும், கொடுக்கும்படியாகவும், மற்றும் கனவான்கள் டி பாடசாலை தலைமை ஆசிரியவர்களுக்கே நேரே அனுப்பும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறோம். பணம்கொடுத்தவர்களின் இனவழி ஜாபிதா நம்மித்திரனில் பிரசுரம் செய்யப்படும்.

ஜே. ஜி. குமரப்ப நாடார்
P. S. குமரகுருபர நாடார்,

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## நமது குலத்தொழில்யாது?

மேற்கண்ட பெயரிட்ட நூலொன்று நமது நண்பர் க்ஷத்திரிய மித்திரன் அதிபர் ஸ்ரீமான் த. விஜயநவைரசாமிக்கிராமணியவர்களால் எழுதி 64பக்கங்கொண்ட நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு புத்தகரூபமாக வெளியிடப் பெற்றிருக்கிறது. அவரது அழகிய படம் ஒன்றும் அதோடு அமைக்கப் பெற்றிருக்கிறது. அப்புத்தகம் எட்டணு விலைவைத்தாலும் குறைந்த விலையென்றே சொல்லலாம். ஆனால் பற்பல நண்பர்களும் எளிதில் வாங்கி வாசிக்கும் பொருட்டு 5-அணு விலையாக மிகக்குறைந்த விலைக்கு விடப்படுவதாகத்தெரிகிறது. அதை ஒவ்வொரு நாடார்களும் வாங்கி வாசிக்கவேண்டியது அவசியம். க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபர் தண்டையார் பேட்டை சென்னை என்ற விலாசத்துக்கு 6-அணு ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

பூர்வீகத்தில் நம்பாத நாட்டில் ஜாதியேற்பட்டகாரணங்களும் ஜாதிக்குறிய பூர்வீகத் தொழில் இன்னவை என்பதையும், தொழில் மாறுபட்ட காரணங்களையும் நாடார்கள் பூர்வீகத் தொழில் எது வென்பதையும் காலமாறுபாட்டால் சிலர் கையாண்டு வருந்தொழி லேற்பட்டதற்குரிய காரணங்களையும் நல்லநூல்களிலிருந்து இதிகாச புராணங்களிலிருந்து பற்பல ஆதாரங்களுடன் இதை முதப் பெய்திருக்கிறது. சரியான ஆராய்ச்சியன்றி சில புலவர்கள் தப்பர்த்தத்துடன் வெளியிட்ட தூற்றுதலையும் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

ஆனல் ஜாதி மதபேத மற்று சமரசமாய்க் காலங்களிக்க வேண்டு மென்ற கொள்கையே மேல் கோக்கி நிற்கும் இவ்விருபதாம் நூற்றுண்டிலும் ஜாதிகளைக் குறித்தொரு நூலும் வேண்டுமோ? அதனுல்ப் பிரயோசன முண்டாகுமா, தற்காலமிருக்கிற நிலைமையில் முன்னேறும் வழியைப் பார்த்தாலே போதாதா? என்ற கேள்விகள் உண்டாகின்றது.

தம் மித்திரியாவைப் பொருத்த மட்டும் ஜாதி என்பது முற்றிலும் மறைந்துபோகுமென்பது முடியாத காரியமே. அப்படி ஜாதி மதபேதம் பூரணமாய்த் தொலையுங்காலம் ஒருவருமே இதைப்பற்றி பேச முன்வரமாட்டார்கள். அக்காலம் இப்பேற்க்கொற்ற நூற்களை சுட்டெரித்துவிடவுந் தணிந்திடுவார்கள். தற்காலத்திலோ ஜாதிமத தேசப்பற்றற்ற துரவிகளுங்கூட நாட்டைவிட்டுநாட்டில் வந்து தேசத்துக்கும் மதத்துக்கும் அபிமானிகளாக முன்வந்து பிரசங்க மழைபொழிகின்றார்கள். ஜாதி மதபேத மறவேணுமென்று பறை சாற்றுவோருக்கும் கூட உதட்டில்மட்டும் அவர்கள் முயற்சி நின்றுவிடுகின்றன. சிலர் சிலகாரியத்தில் பேதத்தை விலக்கி சில காரியத்தில் பெரிய பேதத்தை காட்டுகின்றார்கள். உண்மையான தேசாபிமானிகளும் அறிவாளிகளுங்கூட ஜாதியில் வித்தியாசங் காட்டும் குறேதம் அழியவேண்டு மென்கிறார்களே தவிர ஜாதியென்பது அவிந்துபோகக் கூடாதென்றே விளக்கமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஜாதியானது முற் போக்கடைய வேணுமானுல் தம்முடைய பூர்வீகம் எது? அது எப்படி மாறியது? பெருமையான பூர்வீகத்தை அடைய வழியெது என்று சிந்தித்துப் பார்க்காத ஒரு ஜாதி எப்படியும்முன்னேற்றமடைய முடியாதென்றே சொல்கிறார்கள். தனித்த ஒருமனிதன் ஞானவான் ஆகி மோட்சமடைய கருதும் போதும் அவன் நாம் யார், எதற்காக பூமியில் பிறந்திருக்கிறோம், நாம் எப்படி இவ்வுலகிற்கு வந்தோம் இனி எங்கே செல்வோம் என்ற ஆராய்ச்சியின்றி மேற்போக முடியாதென்றே தெரிகிறது. ஆகவே ஜாதி வித்தியாசங்கள் விலகினாலும், ஜாதி என்ற ஒருபிடியும்,ஜாதியின் பூர்வீகத்தன்மைகளை உணரும் அறிவும் மனிதர்களுக்கிருக்கவேண்டியது அவசியமென்றே நம்புகிறோம். மேலும் ஜாதிமத வித்தியாசங்களினாலே முற்காலத்திலுள்ள நூற்களை தற்காலத்தில் படித்தவர்களுங் கூட பதச்சேதம் பண்ணி மனம் போன போக்கில் புதிய நூற்கள் எழுதப் புறப்பட்டு விடுகிறார்கள். இப்புராணப் புரட்டர்களும் இதரர்களும் உண்மையை அறிந்து கொள்ளும் பொருட்டே கிராமணியார் தம்முடைய ஆராய்ச்சியினால் பற்பல நூல்கள் எழுதி வைத்திருப்பதை ஒவ்வொன்றாய்ப் பிரசுரம் பண்ண முன் வந்திருக்கிறாரென்பதை சகலரும் அறியவேண்டும்.

நாடார்கள் விஷயத்தில் சில ஜாதிக்காரர்கள் கலகமும் கட்டுப்பாடுகளும் செய்து கஷ்டப்படுத்த முன்வந்திருந்ததுபோலவே சற்றறிவாளர்களும் நாடார்களுக்குள்ள நாலாதாரங்களை மாற்றியும் அதனை தூற்களியற்றியும் வந்திருக்கிறார்கள் வென்பதில் சில விஷயங்களை மட்டும் இதன் கீழ் பிரசுரித்திருக்கின்றோம்.

(அதாவது, 1893-ல் அச்சிட்ட யாழ்ப்பாணம் ஸ்ரீமான் கா. கதிர்வேற் பிள்ளை அவர்கள் பேரகராதியில்.)

ஈழத்தூலச் சான்றார்—ஏனாதிநாயனார்.
ஏனாதிநாயனார்—அருபத்திமூவரிலொருவர்.
சாணுன்—ஓர் சாதியான், சான்றான்
சான்றார்—சாணுர், சான்றோர்.
சான்றவர்—அறிஞர்.
[illegible]
நளவர்—கள்ளிறக்குஞ் சாதியார்.
பனையேறி—ஓர் பாம்பு.
மாபிறேர்—சான்றோர், சுற்றத்தவர்,
நாடன்—சோழன்.
பாண்டியன்—தமிழ்நாடன்.

(1911-ல் அச்சிட்ட, காஞ்சிபுரம் ஸ்ரீமான் நாகலிங்க முதலியாரவர்கள் தமிழ்மொழி யகராதியில்.)

ஏனாதிநாயனார்—அருபத்திமூவரிலொருவர், கள்ளிறக்குஞ் சாதியார்.
ஈழவர் / ஈழுவர் }—ஓர்வகைச்சாதியார்சாணுர்
சாணுன்—ஓர் ஜாதியான், கள் விற்போன்.
சான்றார்—பெரியோர், சான்றோர்.
நளவர்—கள்ளிறக்குஞ் சாதியார், சாணுர்.
மாமேறி—சான்றான், சாணுன்.

பதினெட்டு வருஷங்களுக்குள் எழுதிய மேற்கண்ட இரண்டகராதிகளுக்குள் வித்தியாசங்களைப் பார்த்தால் படித்தவர்களுக்குள்ளேயும் ஜாதித்துவேஷம் எவ்வளவுதூரம் ததும்பிக்கிடக்கின்றன வென்பது நன்கு விளங்குகிறது. 1834ஞூத்துக்குப் பின்னரே மருவாகவிளங்கிய சாணுர் என்னும்பதத்தை முதலாவது எழுதிய அகராதியில் சேர்த்திருந்தாலும் சான்றார் சாணுரான என்பதைஉள்ளபடி விளக்கியிருக்கின்றார். ஏனாதிநாயனார்-சான்றார் என்பதையும் அவர் மறைக்கவில்லை. நளவர் என்றும் ஓர் ஜாதியார் தான் கள்ளிறக்குஞ் ஜாதி யாரெனக் காட்டியிருக்கிறார்.

பின்னர் வெளியிட்ட கனம் முதலியாரவர்கள் தாம் கற்றும் அறிவிலார் என்பதைக் காட்டும் பொருட்டு முன்னுக்குப் பின் முரண்படும் அர்த்தங்களையே காட்டியிருக்கிறார். ஏனாதிநாயனார் கள்ளிறக்குஞ்சாதியார் என்று யாரிடம் பாடம் கேட்டனரோ?ஈழுவரையும் நளவரையும் சாணுரையும் ஒன்றாகப் பாவித்திருக்கிறார். சான்றார்க்கு பெரியோர் என்ற அர்த்தம்போட்டு விட்டு பின்பு,மாமேறிக்கு சான்றான் சாணுன் என்று அர்த்தம் போட்டிருக்கிறார். சான்றவராகிய பெரியோர்கள் மாமேறுவோ ரென்று கொள்வதோ அல்லது எதன் பொருட்டேனும் மாமேறுபவரெல்லாம் சாணுன் சான்றானென்று கொள்வதோ! தெரியவில்லை.

68 வருஷங்களுக்கு முன்னர் நூற்களிலில்லாத சாணுர் என்னும் பதத்தை கனம் பிள்ளையவர்கள் சேர்த்தனர்.அவருக்கு 18 வருஷங்களுக்குப்பின் வெளியிட்ட கனம் முதலியாரவர்கள் அவர் கொண்ட அர்த்தங்களத்தனையும் தள்ளிவிட்டு அதற்குமேற் புதிய அர்த்தங்களை கற்பனை பண்ணியிருக்கிறார். பிள்ளைக்கு முதலி கெட்டிக்காரர்தான்.

பின்னுலியற்றுவோருக்கு முன்னுலாகக்கொள்ளு மின்னூற்களிலேயே முன்னூற்கும் நன்னூற்கும் முழு வித்தியாசமான பதப்பிரயோகங்களைப் புகுத்துவதானல்நமது தாய்ப்பாஷையின் மகிமை என் கெட்டுப்போகாது? பாஷைகுன்றி விட்டதே தமிழ்மொழி யலங்காரம் சிதைந்து விட்டதே என்று மனம் வருந்தும் பாஷாபிமானிகள் நூல்புரட்டர்களைக் கண்டுபிடித்து நக்கடி தண்டிப்பதை விட்டு இதரபாஷைப் பழக்கத்தால் சுயபாஷைமதிப்புக்குறைந்து விட்டதென்று கூக்குரலிடுவது கூடாதன்றோ!

இதுநிற்க
கம்பராமயாணம் சுந்தரகாண்டம் ஊர் தேடுபடலம் 112-வது செய்யுள்

ஆலையின் மலையின் சாறன் மழையினில்
அமுதவாரிச்
சோலையிற் துவசரில்லிற் சோனகர்
மனையிற்றூய
வேலையிற்கொளவொளுத வேற்கொளுர்
குமுதச்செவ்வாய்
வாலெயிற் றூறுதீந்தேன் மாந்தினர்மயங்
குவாரை,

இவ்ராமயாணச் செய்யுளைப் புத்தகரூபமாய்ப் பதிப்பித்த ஒரு பிள்ளையவர்கள் மேற்கூறிய கவியின் இரண்டாவது வரியில் துவசரில்லிற் என்பதற்கு மட்டும் அக்கவியை அச்சிட்டிருக்கும் பக்கக்க

## தியாகராஜன் அல்லது திறமையுள்ள ஓர் வாலிபன்.

(முன் தொடர்பு)

எட்டாம் பாகம்.

தனஞ்சயன் மாளிகை முன்னிலும் அதிக வெண்மையாய் இருக்கிறது. தனஞ்சயன் தன்பறவைகளின் அறையில் நிற்கிறான். திடீரென அப்பறவைகள் முழுதும் தம்முயிரைவிட்டன. உடனே தனஞ்சயன் தன்னுடைய மார்பு வலிக்கிறது பிடித்துக்கொண்டுதரையில்விழுந்துபுரண்டு புலம்பலானன். சற்று நேரம் புலம்பி புரண்டுவிட்டு உயிர்விட்டான். உடனே படீர் என்ற சப்தம் ஒன்று கேட்டது. அச்சமயத்திலேயே யாகசாலையில் உள்ள கும்பங்கள் தொண்ணூற்றொன்பதும் வெடித்தது. அதிலுள்ள ஆவிகள் எல்லாம் பெரிய ஹாலில் உள்ள தந்தம் கூடுகளை வந்தடைந்தது. ஆனாலும் கதவு மூடியிருந்தபடியால் அந்த ராஜ குமாரர்கள் அனைவரும் சற்றுத் தயங்கி நின்றுவிட்டுகதவை உடைத்தும் மற்றும் பலவிதமான பலாத்காரமுடன் அவ் வறையினை விட்டுவெளியே வந்தார்கள். தினகரன் இவர்களைவந்து சந்தித்துக்கொண்டான். இவர்களில் தினகரனுக்குச் சொந்தமானவர்களாவது தெரிந்தவர்களாவது ஒருவருமில்லாததால் இவன் ஓர் மரத்தின் பின் மறைந்துகொள்ள முயன்றான். ஆயினும் ராஜ குமாரர்கள் அவனையாரென்று விசாரிப்பதற்காக அவனை அழைத்து யாரென்று வினவினர்கள். அதற்குஅவன் தன்னூர் தர்மாபுரி வாசன் என்றும் அங்கு தியாகராஜன் என்றும் மந்திரிகுமாரன் வந்து இவ்வாண்மனையைப் பற்றி எவ்வளவோ சொல்லியும் அதிலுள்ள தன் நண்பன் கார்த்திகேயனை மீட்டவேண்டு மென்று சொன்னபோதிலும் பிரதாப மன்னன் தியாகராஜன் தன் மகனைக் கொன்றதாக எண்ணி அவனை ஜெயிலில் போட்டுவிட்டதாகவும் அவனுடைய கதிக்கு யிரங்கி அவனைக் காக்கும் பொருட்டும் பிரதாபனுக்குப் புத்திபுகட்டவேண்டு மென்றும் தான் இவிடம் வந்ததாகவும் சொன்னான் பிறகு தான் எவ்வாறு ஒரு கிழவியைக் கண்டு தனஞ்சயனின் கெட்ட எண்ணங்களையும் அதற்கு பரிகாரங்களையும் கேட்டறிந்துகொண்டு அம்மஹாதேவியரால் கொடுக்கப்பட்ட தங்கச் சாவியின் உதவியாலும் தனஞ்சயனின் உயிர் ஸ்தானமாகிய முட்டையை உடைத்த விதத்தைப் பற்றியும் சொல்லி முடித்த உடனே கார்த்திகேயன் அக்கூட்டத்திலிருந்து வந்து தினகரன் காலில் விழுந்து தன்தகப்பன் தன்னுடைய உயிர்த்தோழனும் தினகரனுடைய நண்பனுமாகிய தியாகராஜனிடம் காட்டிய கொடுமைக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். உடனே தினகரன் கார்த்திகேயனைக் கட்டி யணைத்து இச்சமயத்திலேயே கார்த்திகேயன் தர்மாபுரிக்குத் திரும்பவேண்டும் என்றும் மனமுழைந்து ஏங்கி ஏங்கி கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் தியாகராஜனுக்கு ஆறுதல் அளிக்கவேண்டு மென்று வற்புறுத்தவே கார்த்திகேயனும் தினகரனும் தர்மாபுரியை நோக்கிப் புறப்பட மற்ற ராஜகுமாரர்கள் ஐம்புநாட்டு அரசனை கண்ணியனும் கௌசிகநாட்டு அரசனை மதாட்டதிபதி மச்சேந்திரனும் தினகரனுக்குத் தங்கள் நன்றியைச் செலுத்தி விட்டு அவனை தங்கள் நாட்டிற்கு அவனுடைய சாவகாசமான நேரங்களில் வரவேண்டுமென்று சொல்லிவிட்டு தத்தம் ஊர் நோக்கிச் சென்றார்கள்.

(இன்னும் வரும்)

கல்லூரி மாணவன்.

டைசியில் (*)புள்ளி போட்டு துவசர்-சாணுர் என்று குறிப்பெழுதியிருக்கிறார். துவசர் சாணுர் என்று எந்த நூல்களில் படித்தாரோ!

பழையர் துவசர் படுவர் கள்விலைஞர் என்று சொன்ன சேந்தனுவது,

“தொக்ககள்விற் போர்மாமஞ்
சௌண்டிகர் துவசரோடு
தக்கோர் பிழியர்மற்றும்
படுவருஞ் சாற்றுமன்றே.”

என்று சொன்ன நிகண்டுந் காரமாவது துவசர்--சாணுரென்று சொல்லவில்லை. அதைப்படித்த பிள்ளையவர்கள் இல்லாத சொல்லைச்சொல்லிக்குறித்திருக்கின்றார்.

புராணப் புரட்டும் கவித்திருட்டும் வீண்மிரட்டும் வித்வச் செருக்குமுள்ள போலிப்புலவர்களைவாயடக்கு நமது கல்விச்சிங்கமாகிய க்ஷத்திரிய மித்திரனையும் மற்றும் வெளியிடும் புத்தகங்களையும் நாடார்கள் கல்வாரவேற்பார்களாக.

## நம்பிக்கை.

“தமிழ்நாடு” நிருபர் எழுதிய சரீராம்சம் பின்வருமாறு:—

மனிதனுக்கு முக்கியமாக வேண்டியவை நம்பிக்கை என்பது. வியாபாரமோ, உத்தியோகமோ, விவசாயமோ எதுவானாலும் சரி நம்பிக்கையேயென்றும் இதை விசுவாசமென்றுஞ் சொல்லலாம். நம்பிக்கையோடு முயலாதவர்க்கு ஆகாத காரிய மொன்றுமே இல்லை. ஒருவன் எதாவது ஒரு விஷயத்தில்பிரவேசிப்பதிருக்கிறான். நம்பிக்கையோடு அவ்விஷயத்தில் தலையிடவேண்டும். ஜேம்ஸ் வாட் என்னும் ஆங்கிலேயச் சிறுவன், தன் தாயார் காப்பி தயாராக்க வைத்த வெந்நீர் தவலையின் நீராவியால் மேல்மூடி தடதட வென அடித்ததைக் கவனித்து இப்பேர்ப்பட்ட ஆவியால் அநேக காரியங்களைச் செய்து முடிக்கலாமென எண்ணினான். ரெயில் உண்டாக்கப்பட்டது நீராவியால் எண்ணற்ற வேலைகள் நடக்கிறதற்கு இவனது நம்பிக்கையே முக்கிய காரணமா யிருந்தது. நெப்போலியன் போனபார்ட் சாதாரண போர்சிரன் வீட்டில் பிறந்தவனே. வாலிபத்தில்இவன் இராணுவ பயிற்சி பெறும்போதே, இராணுவங்களை யெல்லாம் நடத்தக் கூடிய தலைமைப் பதவியைப் பெற எண்ணினான். போதுமான கல்வி யில்லாவிடினும் நம்பிக்கை யுடையவனுக நிலைநின்று முயற்சி செய்ய, சேனாதிபதியாக மட்டுமல்ல, பேர்பெற்ற சக்ரவர்த்தியாகவும் விளங்கினான். ஓர் மாணவன் பிரவேச பரீக்ஷைக்குப் போக வேண்டும். இப்பரீக்ஷையில்தேறிபெறவும் இவனுக்கு ஆவல் முயற்சிக்கிறான். நம்புகிறான். இந்நம்பிக்கை அவனுக்கு உதவியளிக்க முதல் வகுப்பில் தேர்ச்சியடைகிறான். இவன் வெற்றியடைய வழியாயிருந்தது நம்பிக்கையே. ஒரு வியாபாரி யொருவன் சொற்பத் தொகையைக் கொண்டு வியாபாரத்தை ஆரம்பிக்கிறான். இடையில் நஷ்டம் நேரிடுகிறது. என்றாலும், லாபமடைவேன் முயற்சிப்பேன் என நம்பிக்கைகொண்டு வியாபாரஞ் செய்ய, நஷ்டத்திற்குத்தக்க சம்பாதனையாக அநிலைபதத்தை அடைகிறான். நம்பிக்கையையே மாபெரும் சக்தியென்று கூறுவர்கள். மனதின் நம்பிக்கை ஆதாரமாக சரியான விசுவாச மிருப்பின் எவற்றையும் நம் வசமாக்கலாம். தெய்வத்தின் பேரில் முழு நம்பிக்கை வைத்தோமானால், நாம் கோருகிற காரியத்தை அடையாமற் போவதில்லை. சமீபத்தில் போர்த்துகீஸைச் சேர்ந்த கோவையைச் சேர்ந்த பரிசுத்த சேவியரின் அழியாச் சரீரத்தை பக்தியுடனும், நம்பிக்கையுடனும் முத்தமிட்ட 18-வயதான குருடன் பார்வை பெற்றுனென்ப் பத்திரிகைகளில் வெளியாயிருந்தது. துரோபதையை மானபங்கஞ் செய்யும் பொருட்டு, துச்சாதனன் அவள் சபையில் வஸ்திரத்தை களைக்க அப்பெண்மணி நம்பிக்கையுடன் ஸ்ரீ கிருஷ்ணனை அழைக்க அவர்செய்த அற்புதம் யாவருமறிந்ததே. இவைகளெல்லாம் காரணம் நம்பிக்கை. ஒரு எஜமான் கோபி அவனிடமிருக்கும் வேலைக்காரன் சாந்தமுள்ளவன். இக்கோபியை எளிதில் வசப்படுத்தலாம். நம்பிக்கையுடன், அவனை நேசித்து, இவனது அன்பைச் சம்பாதிப்பேன் என உறுதிசெய்தால் சில நாளைக்குள் நாளைக்குள் அவ்வெஜமானன் வேலைக்காரனின் பரமபக்தனாயிருப்பதைக் காணலாம். ஒரு ஊரில் வைத்தியரொருவரிருந்தார். அவர் சிறந்த குரு. அவருடைய சிநேகிதரில் ஒருவருக்கு சுரம் கண்டது. குருவான வர் மருந்து அனுப்பினர். ஆனால் காய்சல் மருந்தை அனுப்பாமல், வேறு வியாதிக்குரிய மருந்தை தவறுதலாக அனுப்பி விட்டார். வியாதியஸ்தன் இம்மருந்தை நம்பிக்கையுடன் சாப்பிட வியாதி பூரணமே குணமாகிவிட்டது. குருவானவர் மறுதினம் மருந்துகளைப் பரிசோதிக்கும்போது, தவறுதலாக மருந்து அனுப்பப்பட்டதைக் கவனித்து, மிகவே மனம் வருந்தி தனது வேலைக்காரனை அனுப்பி வியாதிக்காரனைப் பார்த்துவரச் சொன்னார். வியாதி குணமாயிருக்கிறது என்பதைக் கேட்டு ரொம்பவும் ஆச்சரியங்கொண்டனர். இதில் ஆச்சரியப் படத்தக்க தொன்றுமில்லை. யாவும் நம்பிக்கையின் விசேஷமே. நம்பிக்கை யுடையவனாயிரு. நீ விரும்பியதைப் பெறுவாய் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். நம்பிக்கையுள்ள மந்திரம் நீ கோரியதை அளிக்கும் எனகிறில்துவும் சொல்லுகிறார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## வீண் பிதற்றல்.

சென்ற மாதத்தில் சென்னைச் சட்டசபையில் மந்திரி கனம் ராமராய நிங்கவாரு தயாரித்து ஆஜர் செய்த "ஹிந்து தேவஸ்தான பரிபாலனமசோதா"வின் பேரில் கனம் மெம்பர்களின் விவாதத்தையும், மசோதாவின் போக்கையும் நேயர்கள் நன்கு கவனித்திருக்கலாம். மசோதாவைப்பற்றிப் பேசிய கனம் மெம்பர்களிற் சிலர் பொறுப்பற்ற விதமாய்ப் பேசியிருப்பது கவனிக்கத்தக்கது. 18-12-22ல் மசோதாவின் குணதோஷங்களைப்பற்றி ஸ்ரீமான் திவான் பகதூர் M. இராமச்சந்திரராவ் பேசுகையில் "ஹிந்து என்றபதத்தைநன்கு விளக்கிக் காட்டிவிடவேண்டும். கோவிலில் நுழையக்கூடாதவகுப்பினரும் ஹிந்து என்ற பதத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில் அதை இப்பொழுதே வெளிப்படுத்தி விடவேண்டும்." என்றார். இக்கனவான் ஓர் பிராமணராயிருந்தும் ஹிந்து என்ற பதத்திற்கு அர்த்தம் தெரிந்து கொள்ளாதிருப்பது பெரும்வியப்பே. ஹிந்துக்களில் சைவர்கள். வைஷ்ணவர்கள், ஸ்மார்த்தர்கள் முதலிய பல பிரிவுகளிருப்பதேயன்றி, ஹிந்துக்களென்றால் கோவிலுக்குள் நுழைபவர்கள் நுழையக் கூடாதவர்கள், கோவிலத்தம்தலைமேல் கட்டிச் சுமப்பவர்கள், கோவில் சொத்தைத் தமது தகப்பன் சொத்தப்போ லெண்ணி வாயில் வாய்க்கரிசிபோட்டு கோவிலில் படுத்துறங்குபவர்கள், சிவபெருமான் வீடென்றும் பாராமல் கன்னக்கோல் சாத்தி உள்நுழைந்து சிவலிங்கத்தையும்கூட திருடிச்செல்பவர்களெனப் பலவேறு அர்த்தங்களிருப்பதாய் கனம் ஜுவ்கருதுகிறார் போலும். அல்லது புதுமூலம்கண்டு பிடிக்கிறாரோ அறியோம். ஹிந்து என்றபதத்திற்கு "வகுப்பு வித்யாசமின்றி பக்தி வைராக்யத்துடன் ஹிந்து மதத்தை அனுஷ்டிப்பவர்" என்பதைத்தவிர வேறு சபடிவிஷன் பொருள் உண்டென்பது வீண் பிதற்றல். பிராமணர்களிலுங்கூட இத்தகைய பேதபுத்தியுடையோர் சிலர் இருப்பின் தாய் மதத்துரோகத்திற்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ?

[illegible]திற்க, சிலதர்மஸ்தாபனங்களில் பரம்பரைப் பாத்திய மென்று டிரஸ்டியாக இருக்கிற கனம் ராமநாதபுரம் இராஜா, சாதுர்யமாய்ப் பேசுகையில் "பரம்பரை[illegible]த்தியதையுள்ள டிரஸ்டிகளுக்குக் கமிட்டியில் ஸ்தானம் பெற சுதந்தரமிருக்கவேண்டும்.............. எனக்குத் தெரிந்த ஒரு கோவிலுக்குள் நுழைய அருகதையில்லாத ஒருவரை சப்ஜட்ஜ் அந்தக் கோவிலின் டிரஸ்டியாக நியமித்திருக்கிறர், ஆதலால் ஸப்ஜட்ஜ்களிடமிருந்து அந்த அதிகாரத்தை எடுத்துவிடவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். இது அழகானவாதம். கோவிலுள் நுழைய அருகதையில்லாத ஒருவர் என்பது தம்மையே குறிப்பிட்டதாகவும் யூகிக்கலாம். ஏனெனில் சிவகாசியிற்கூடிய எட்டாவது நாடார் கான்பரன்ஸில் இக்கனவான் (இராமநாதபுரம் ராஜா) அக்ராஸனம் வகித்துப் பேசுகையில் "திருவாங்கூர் பகுதியிலுள்ள சில ஆலயங்களுள் தம்து வகுப்பினர் நுழைய அருகதையற்றவர்" எனத்தாமே பிரஸ்தாபித்துள்ளார். அதை ஞாபகம் வைத்து தமது நியமனத்தை ஒருசமயம் ஆக்ஷேபித்து சட்டசபையில் [illegible]பொருளாக "ஒருவர்" எனக் [illegible]ரோ வென்றும் சந்தேகிக்க [illegible] அப்படியிருந்த போதிலுமென்ன? [illegible] என்பப்பட வேண்டு[illegible] சுமந்துகொண்டுபோக [illegible] புந்தெடுத் [illegible] பெறுவதுபோல [illegible] கட்டின கோவிலை மற்றொருவ[illegible] அப்பன்கட்டிய கோவில்போல் [illegible] கொண்டு கோவில் கட்டியவர்களின் சுவாமியின் எதிரில் [illegible] ருகப்பாவிக்கக்கூடிய இக்கா[illegible] ஜனப்பிரதிநிதிகளென சட்டசபையில் அச்சம் பெற்ற மேதாவிகளு[illegible]க்கவில்லை, எதற்காக? மேலும் [illegible] கைங்கரியம் செய்ய வேண்டு[illegible] அவாவுடையோர் மட்டும் தேவஸ்தானக் கமிட்டி மெம்பர் ஸ்தானங்களுக்கு அபேக்ஷகராய் முன்வருவரேயன்றி ஏனையோர் அதையொருஉன்னத உத்தியோகமாக நினைக்கப் போவதில்லையாதலால் கனம் மெம்பர்கள் பீதியடைவதில் அர்த்தமில்லை. புண்ணிய கைங்கர்யம் செய்ய விரும்புகிற ஓர் ஹிந்துவின் உரிமையைக் கெடுக்க மற்றொரு ஹிந்து முற்படுவது பாபமல்லவா? அத்துடன் கனம் ராஜா தேவஸ்தான டிரஸ்டிகள் விஷயத்தில் பரம்பரைப் பாத்தியதைக்கு ஹானி ஏற்பட்டுவிடக் கூடாதென்கிறார். மத சம்பந்தமான வைதீக கர்மத்தில் பரம்பரைப்பாத்தியம் ஏன்?

இவைபோக, பிரஸ்தாப மசோதாவைப்பற்றி பத்திரிகை வாயிலாய் அபிப்பிராயம்கூற வந்தவர்களுள் நாகைஸ்ரீமான் K. S. வெங்கடரமையர் தமது அபிப்பிராயங்களுக்குஊடே "மேல்நாட்டார்தொழிற் கக்ஷியென்றும், தாழ்ந்த வகுப்பினரை உயர்த்துவதென்றும்பல புதிய அபிப்பிராயங்களை நம்நாட்டாருக்குப் போதித்து சண்டையை கிளப்பிவிட்டதுபோதாதா! சிலகோவில்களுள் சிலஜாதியார் போகக்கூடாதென்ற கட்டுப்பாடிருக்கையில்வர்ணாச்சிரமவித்தியாசமின்றி 10 ரூபா வரிச்செலுத்துபவர்களுக்கெனஉரிமை ஏற்படுத்தி விட்டால் கஷ்டமும் சண்டையும் ஏற்படும். தூங்குகிற ஆயக்காரனை கிளப்பிவிடக் கூடா"தென்கிறார். அதுவும் வீண்பிதற்றல் வாதமே. இந்த உரிமையை வரிசெலுத்துவோருக்குக் கொடாமல் கோவில் பெருச்சாளிகளை வைத்துக்கொண்டாலும் சரிதான். பொதுவாக வெகுஜன உரிமையைக் கெடுப்பதில் கங்கணங்கட்டுவது மேதாவிகள் செய்கையாகாது. பிரபல தேசாபிமானிகளெல்லாம் மதஸ்வதந்திரம் யாருக்கும் சம்மாயிருக்க வேண்டுமென தேசமகாசபைகளில் ஏகமனதாய் தீர்மானம் நிறைவேற்றுகிற இக்காலத்தில் கோடரிக்காம்புகளான சுயநலப்புலிகள் சிலர் தோன்றுவதும் ஸகஜமே. ஒவ்வொரு பகுதியிலுமுள்ள வழக்க பழக்கத்தை யனுசரித்த கட்டுப் பாட்டைத்தவிர கோவிலுள் நுழையத்தகாதவரென ஒருபிரிவு இருப்பதாகக்கருதுவது மூடத்தனமேயாகும்.

ஆகவே, "ஹிந்துமத வேதசாஸ்திர புராணேதிகாசங்களின் ஆதாரவுகளைக் கொண்டு ஒருவகுப்பினரை விலக்குச் செய்வதைத்தவிர,, ஹிந்துமத தத்துவமறியாத போலிவேஷதாரிகளின் கூற்றுக்கு மசோதா சீர்திருத்தக் கமிட்டியார் செவிசாய்க்க மாட்டார்களென்றே நம்புகிறோம். சுபம்"

கெ. கலியாணசுந்தர நாடார்.

## பம்பாய் நாடார் வியாபாரிகளும், நாடார் மஹாஜன சங்கக் காரியதரிசியும்.

துந்துபிஞு மார்கழிமீ 16உ (31-12-1922) ஞாயிற்றுக் கிழமை இரவு சுமார் 9-மணிக்குப் பம்பாய், நாடார் வியாபாரிகள் கூட்டமொன்று நாடார் மகாஜன சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் வா. அ. புன்னையப்ப நாடார் அவர்களுக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதற்காக ஸ்ரீமான் வெ. கா. பு. குமாரசாமி நாடார் அவர்கள் மளிகையில் கூடியது. மகா-ௐ-ௐ-ஸ்ரீ அ. ல. க. தங்கப்ப நாடார் அவர்கள் பிரேரணை செய்ய மகா-ௐ-ௐ-ஸ்ரீ பா. சி தெ. ச. கிருஷ்ண நாடார் அவர்கள் ஆமோதிக்க மகா-ௐ-ௐ-ஸ்ரீ வெ கா. மு. கா. சிவப்பிரகாச நாடார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு மகா-ௐ-ௐ-ஸ்ரீ வெ. கா. பு. கா. ஷண்முக நாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மகா-ௐ-ௐ-ஸ்ரீ வெ கா. பு கு. சிதம்பரநாடார் அவர்களால் உபசாரப்பத்திரம் படிக்கப்பட்டது. காரியதரிசி அவர்கள் உபசாரப் பத்திரத்துக்கு மிகவும்அருமையாகபதில்சொல்லியதுடன்நாடார் மஹாஜன சங்கத்தைப்பற்றியும் நம்ஜன சமூகமுன்னேற்றத்தைப்பற்றியும் தெளிவாய் உபந்நியாசம்செய்தார்கள். மகா-ௐ-ௐ-ஸ்ரீ வெ. கா மு. அ. சங்கரலிங்க நாடார் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு மகா-ௐ-ௐ-ஸ்ரீ வெ. கா. மு சு. அ. முத்தும்பெருமாள்நாடாரவர்களால் காரியதரிசி அவர்களுக்கும் சபைத் தலைவர் அவர்களுக்கும் விருதுபட்டி மகா-ௐ-ௐ-ஸ்ரீ தி. வெ. சு. சிதம்பரநாடாரவர்களுக்கும் பூமாலை சூட்டப்பட்டது. அதன்பின் மகா-ௐ-ௐ-ஸ்ரீ எ. பு. ச. முத்துக்கருப்ப நாடார் அவர்கள் தலைமையின்கீழ் சிற்றுண்டி விருந்தளித்து மகா-ௐ-ௐ-ஸ்ரீ வெ. கா. பு. கு. அ. பாண்டிசங்கரலிங்க நாடாரவர்களால் தாம்பூலம் வழங்கப்பட்டு சபை மங்களமாக நிறைவேறியது என்று பம்பாயிலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார்.

## இலங்கை வர்த்தமானம்.

(நமது சொந்த நிருபரிடமிருந்து.)

### பத்திராதிபரவர்கள் சுற்றுப் பிரயாணம்.

ஞாயிற்றுக்கிழமை (6-1-22) மாலை 9-மணிக்கு கொள்ளுப்பட்டி நாடார்கள்நமது மித்திரன்பத்திராதிபரவர்களையும், கௌரவமானேஜர் ஸ்ரீமான் தி. கருப்பையாபிள்ளையவர்களையும் வரவேற்க, ஏற்கனவே ஞா. பா. வேதநாயக நாடாரவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரகாரம் ஸ்ரீமான் ரு. தா. வேதமுத்து நாடாரவர்கள் ஜாகையில் குலாபிமானச்செல்வர்களான வாலிபர் முதல் பெரியோர் வரை ஏறக்குறைய 75பேர் குழுமியிருந்தனர். பல உபந்நியாசங்களும் நடைபெற்றன. அவ்வமயம் கனவான்கள் அநேகர் நமது பத்திரிகைக்கு சந்தாதாராகச் சேர்ந்ததோடு, தங்களாலியன்றளவு மித்திரன் க்ஷேமநிதிக்கு நன்கொடையுமளித்தனர் திங்கட்கிழமை பாணதுரைக்குப் போவதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டிருக்கின்றன.

### கலித்துரை.

9-1-23-ல் நாடார்குல மித்திரன் அதிபரும், ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளையவர்களும் டை யூருக்கு விஜயஞ் செய்ய அங்குள்ள உறவின்முறை நாடார்களால் வரவேற்கப் பெற்று 10-1-23-ல் இரவு P. V. பொன்னைய நாடாரவர்கள் கிட்டங்கியில் 9 முதல் 1-மணி வரையும் ஜாதி முன்னேற்றமான பிரசங்கம் இருவராலும் செய்யப்பெற்றது. 11-1-23 காலையில் அவர்களிருவரும் கொழும்புக்குப் பிரயாணம் செய்யப்போகுந் தருவாயில் அங்குள்ள ஒரு அம்மையார் அவர்களை தங்களில்லத்திலமர்த்தி வெகு அன்போடு சிற்றுண்டி அருந்தும்படி செய்து, பிரிய வசனங்களால் மரியாதை செய்து, அவர்களின் இனியபிரசங்கம்கேட்க பிரியப்படுவதாய்த் தெரிவித்துக் கொள்ளலானார்கள். எப்படியும் அவ் வம்மையாரின் இன்சொல்லைக் கடந்துவா மனமில்லாதவர்களாய் 15-நிமிஷநேரம் 'அன்பு' என்பதைப் பற்றி பிரசங்கம் செய்து விடைபெற்று வெளியேறி கொழும்புக்குப் பிரயாணமானார்கள்.

### பாதுக்கை.

12-1-23-ல்அதிபரும் கனம்கருப்பையா பிள்ளையும் மிஸ்டர் துரைப்பாண்டிய நாடாரும் டை யூர் போய்ச் சேர்ந்து, அங்குள்ள உறவின்முறை நாடார்களால் உபசரிக்கப் பெற்றதும் கருப்பையா பிள்ளையும் துரைப்பாண்டிய நாடாரும் அன்னலைக்குப் புறப்பட்டுப்போனார்கள். அதிபர் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். கருப்பையா பிள்ளையவர்களும் அன்வலையிலுள்ள நாடார்களைக் கண்டு பேசிவிட்டு (13-1-23) காலை 8-மணிக்கு கொழும்பு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

### இரங்கூனுக்கு புறப்பாடு.

நமது அதிபரும், கருப்பையா பிள்ளையவர்களும் ஜனவரிமீ 16உ கப்பலில் இரங்கூனுக்குச் செல்லுகிறார்கள்.

### தேகவியோகம்.

கலோனியல் மோட்டார் ஒர்க்கில் வேலைபார்த்துவரும் ஸ்ரீமான் யேசுதாசன் சாமுவேல் நாடாரவர்களுடையஅருமை மனைவியார் இம்மாதம் 4-ந் தேதி புதன்கிழமை இரவு இம்மையைவிட்டு மறுமைக் குடிபுகுந்தார்கள். இவ்வாலிபப் பெண்மணி, யாவராலும் நன்குமதிக்கப் பட்டுவரும் ரெவ. க்ஷார்ல்ஸ் ஹென்றி ஐயாவர்களுடைய ஜேஷ்டபுத்திரி. இவரது பிரிவாற்றாது துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கும் ஸ்ரீமான் சாமுவேல் நாடாரவர்களுக்கும் ரெவ. க்ஷார்ல்ஸ் ஹென்றி ஐயாவர்களுக்கும், அன்னவரது குடும்பத்திற்கும் கடவுள் தக்க ஆறுதலளிப்பாராக.

### இலங்கைக்கு புதிய சீர்திருத்தம்.

இங்கிலாந்து சென்றிருக்கும் இலங்கை கவர்னரவர்கள். வருகிற பெப்ரவரி மாதத்தில் திரும்பிவரும்போது ஒருபுதிய சீர்திருத்த தோரணையுடன் வருவது இப்பொழுது உண்மை யென்றுரைக்கலாம். தற்சமயம் நடந்துவரும் சட்டசபையில் 16 தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரும், மற்றவர்கள் நியமனம் பெற்ற உத்தியோகஸ்தர்களுமாக மொத்தம் 38 பேர் ஆசனம்பெற்று வருகின்றனர். ஆனால் புதிய சீர்திருத்தத்தின்படி 30-தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரும் மற்றும் உத்தியோகஸ்தர்கள் 15 பேருமாக 45பேர் நியமனம் பெறுவார்களென உறுதியாய்ச் சொல்லக்கூடும். தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் பின்வருமாறு கணக்கிடப்படுவார்கள். ஐரோப்பியர் 3, பர்கர் (டச்சுக்காரர்) 2, மகமதியர் 2, இந்தியர் 1, கீழ்தேச வரும்படி சங்கத்தார் 1, மாகாணம் பிரதிநிதிகள் 21, ஆகமொத்தம் 30பேர்கள். லக்ஷக்கணக்கான இந்தியர்களுக்குஒருபிரதிநிதியும், ஆயிரக்கணக்கான ஐரோப்பியர்களுக்கு 3 பிரதிநிதிகளும் ஏற்படுத்தப்படுவது விசனிக்கத்தக்கது. வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும், மத்திய வகுப்பினருமான இந்தியர்கள் ஏராளமாகவிருந்தும் பிரதிநிதி போதுமென்றிருப்பது நம்மவர்களது ஒற்றுமைக் குறைவைக்காட்டுகிறது. இப்புதிய சட்டசபையில் கவர்னரவர்களுக்கு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படும் விஷயங்களில் வாதஞ் செய்ய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இது ஒரு பெருஞ் சிலாக்கியமே. அரசியல்களில் அதிகாரவர்க்கம் தலையிட்டுக் கொள்ளல் மேன்மையைத் தராதென்பது உண்மை ஞல் அக்கிராசன ரொருவர் கவர்னரால் நியமிக்கப்படுவர். 5-வருடங்களுக்குப்பின் இவர் தெரிந்தெடுக்கப்படுவார். புதிய சீர்திருத்த தோரணை வெளியானவுடன், பூராவும் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப் பெறுமென நம்புகிறேன்.

## நாடார் மகாஜன சங்கப் பிரசாரம்.

### நான்குநேரித் தாலூகா.

நாடார் மகாஜன சங்கத்தின் சௌரவப் பிரசாரகரும் பாண்டிய குல தீபம் பத்திராதிபருமான ஸ்ரீமான் K. S. அருணகிரி நாடாரவர்களும், சங்கம் குமஸ்தாஸ்ரீமான் S. K. வீரகுமார நாடாரவர்களும் நான்குநேரித் தாலூகாவுக்கு விஜயஞ்செய்துபணக்குடி, வடக்கன்குளம் முதலிய கிராமங்களில் நாடார்களுக்குள் பெருங் கூட்டங்கூட்டி வைத்து நாடார் மகாஜன சங்கத்தின் நன்னோக்கங்களை, யெல்லாம் கேட்டவர்கள் மனம் நாட்டமுறத்தக்கதாக வெகு சவிஸ்தாரமாய் எடுத்துரைத்தும், ஒவ்வொரு கிராமத்திலும் நாடார்களுக்குள் ஏற்பட்டிருந்த கக்ஷிகளை யெல்லாம் சமாதானத்துடன் ஒற்றுமை செய்து வைத்தும், ஆங்காங்கு கிளைச்சங்கங்கள் ஸ்தாபகம் செய்து அவற்றை நம்தாய்ச் சங்கத்துடன் சேர்த்து ரிஜிஸ்டர் செய்தும் நம்மகாஜன சங்கத்திற்கு ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்த்து தலைக்கட்டுவரி வசூல் செய்து கொண்டு நாளது மாதம் 6உ கள்ளிக்குளம் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு ஷியார்கள் வெகு விமரிசையுடன் வரவேற்கப்பட்டு ஏராளமானஜனக் கூட்டத்தினிடையே பிரசங்கங்கள் செய்து, முடிவில் நான்குவருஷகாலமாய் ஒற்றுமைக்குறைவாய் சீர்கேடடைந்திருந்த பொதுநிதிகளை ஒழுங்கு செய்து நாடார்களுக்குள் கிளைச்சபை ஒன்றுஸ்தாபித்து அதையும் தாய்ச்சங்கத்தோடு சேர்த்து ரிஜிஸ்டர் செய்து கொண்டு 12-1-23 ல் திருமலைபுரம் சென்றிருக்கிறார்கள்.

இவ்வட்டகைகளில்நடந்தபிரசங்கங்களின்பயனாகநாடார்களுக்குள்ஐக்கியமும் புதிய உணர்ச்சியும் நாகரீகமும் உண்டாகிறபடியால் இன்னும் சில மாதங்கள்வரை இவ்வட்டகைகளில் பிரசாரம் செய்து வருவது நம்மவர்களுக்கு அதிக நன்மையை விளைவிப்பது மல்லாமல் நமது நாடார் மகாஜன சங்கத்திற்குபெருங் கியாதியும் உண்டாகு மென்பதில்ஐயமில்லை. ஆகவே நமதுமகாஜன சங்கம் காரியதரிசியவர்கள் இது விஷயமாய் கவனிப்பார்களென நம்பப்படுகிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## வேண்டுகோள்.

நம்மித்திரன் ஐந்தாவ தாண்டிலேனும் வாரப்பதிப்பாக்க வேண்டியும். எக்காலமும் மித்திரன் விருத்திமுகத்தோடு விளங்கவேண்டியும், ஸிலோனில் புதுச்சந்தாதார்களையும், புதிய போஷகப்பிரபுக்களையும் க்ஷேம நிதியும் சேர்க்கவேண்டியும் ஸிலோனிலுள்ள நாடார்களனைவரையும், நேரில்கண்டு நிலைமை அறிந்துகொள்ளவேண்டியும், நாம் செய்த பிரயாணமானது முற்றும் பூர்த்தியாக வில்லை. ஸிலோனுக்குப் பிரயாணமாகி இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இடையில் நாம் இந்தியாவுக்குப் போய் வந்ததினிமித்தமும் அவசரமாய் ரங்கூனுக்குப் பிரயாணமாக வேண்டியதி னிமித்தமும், ஸிலோனிலுள்ள நாடார்கள் அநேகரை நாம் பார்க்கமுடியாதது பற்றி பெரிதும் விசனிக்கின்றோம். ஆனாலும் கூடிய சீக்கிரம் மறுமுறை பிரயாணஞ் செய்வோமானால் சகலரையும் சந்திக்கச் சந்தர்ப்பங் கிடைக்குமென்றே நம்புகின்றோம்.

போஷகர் நிதியும், க்ஷேம நிதியும் நாம் திட்டம் போட்ட பிரகாரம் கிடைக்க வில்லையானாலும், உள்ளன் போடுபசரித் துதவிய தேவ்வளவாயினும் பெருமையோடேற்று உதவி செய்த பெருந்தகையாளரனைவரையும், மனமுவந்துபாராட்டுகின்றோம். நாம் ஜனவரிமீ 7வ ரங்கூனுக்குப் புறப்பட்டு விட்டோமாகையால் மித்திரனை அபிமானித்து க்ஷேமநிதிக்கு உதவி செய்யமனமுடையார் நமது ஆபீஸுக்கு அனுப்பும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

பத்திராதிபர்.

நாடார்குல மித்திரன்

துந்துபிஹு தைமீ 8வ

## ஜனசங்கை.

11

1921 ஹூல்த்து ஜனக்கணிதப்படி சென்னை மாகாணம் மொத்த ஜனத்தொகையும், நாடார் ஜனத்தொகையின் விபரங்களும் சென்ற வாரப் பத்திரிகையில் பிரசுரமாகி வந்திருப்பதை நேயர்கள் பலருங் கவனித்திருக்கலாம். அதில் நாடார்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய பாகங்களின்னவை யென்பதை விளக்குவோம். நாடார்கள் மொத்த ஜனத்தொகையில் பெண்கள் அதிகமென்பதையும் கவனித்திருக்கலாம். திருநெல்வேலி ஜில்லாவிலோ ஆண்கள் தொகை அதிகமாயும் இதர ஜில்லாக்களில்பெண்கள் தொகை அதிகமாயிருப்பதைப் பற்றி நன்கு கவனிக்கவேண்டும். மேலும் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாடார்களில் அநேகர் ஸிலோனில் வசிக்கிறார்கள். அப்பெயர்வளிகள் ஸிலோன் ஜனசங்கையில்தான் கட்டுப்பட்டிருக்கவேண்டும். ஆனதால் ஷை ஜில்லாவில் ஆடவர்கள் அதிகமென்று முன் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிலும் இன்னும் இருமடங்கு அதிகமாயிருக்குமென்றே நம்புகின்றோம்.

ஒரு ஜனசமூகத்தில் ஆடவர்கள் தொகை ஒரு பக்கத்தில் அதிகரித்துக் கொண்டும், மறுபக்கத்தில் பெண்கள் தொகை அதிகரித்துக் கொண்டு வருமானால் பிற்கால வாழ்வில் ஜனசமூகத்தில் எதிர்பாராத மாறுதலேற்படக்கூடும். இதை எப்படி சமநிலைப்படுத்தலாமென்பதைப்பற்றி நாடார் சமூகம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். சென்னை மாகாணம் மொத்த ஜனத்தொகையில்தாரமிழந்தஆண்கள் ஆயிரத்துக்கு 44 பேர்களிருக்கிறார்கள் நாடார்களிலோ ஆயிரத்துக்கு 86 பேர்களிருக்கிறார்கள். மாகாண மொத்தத்தில் விதவைகள் ஆயிரத்துக்கு 189 பேர்களிருக்கிறார்கள்; நாடார்களில் ஆயிரத்துக்கு 140 பேர்களிருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் நாடார்கள் விதவை குறைவாகக்காணப்பட்டாலும் ஜனவிதாசாரம் பார்த்தால் நாடார் சமூகத்துல் விதவைகளின் தொகை அதிகமென்றே தெரிகிறது. மூன்று லட்சத்து முப்பத்தொராயிரம் பெண்களில் நாற்பத்தாறுபிரம் பெண்கள் விதவைகளாயிருந்தால் சந்தோஷவாழ்க்கையை இழந்த சமூகமாகவன்றோ தோன்றும்.

இப்பரிதாபகரமான நிலைமையை அறிவாளிகள் ஆலோசனை செய்து தக்கபரிகாரந்தேடவும் வேண்டும் முற்காலத்தில் நம்தேசத்தில் உடன்கட்டை ஏறுதலென்ற கொடியவழக்கமிருந்து வந்ததை தேசாபிமானிகளும் கவர்ன்மெண்டாரும் ஒரு மனப்பட்டு உடனே அக்கொடிய வழக்கத்தை நிறுத்திவிட்டதுபோல்,விதவாவிவாகத்தை தேசம் அங்கீகரிக்கும்படி செய்ய அவர்களால் சாத்தியப்படாது. ஆசாரசீர்திருத்தக்காரர்கள் வருஷந்தோரும் தீர்மானங்கள் செய்து வந்தாலும் அனுட்டானத்துக்குக் கொண்டுவருவாரும் அனுஷ்டிப்போரும் அரிதாயிருக்கிறது. விதவாவிவாகத்துக்கு சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை யென்றும் பாரமார்த்திகவாழ்க்கைக்கு அது ஏற்றகாரியமல்ல வென்றும் தர்க்கிப்பவர்களே அதிகமாயும், அதைவிரும்பாத சமூகம்பெரும்பாலு மிருப்பதால் அது அனுஷ்டிக்க முடியாமற் போகிறது. முற்கால வழக்கப்படி அனுஷ்டித்த உடன்கட்டையேறும் வழக்கத்தையும், விதவாவிவாகம் ஒழுங்கீனம் என்பதையும் பூர்வீகத்திலிருந்து கையாண்டு வந்த நாடார்கள் தற்காலத்தில்விதவாவிவாகத்தை எப்படி ஒப்புக்கொள்வார்கள். இன்றேல்விதவைகள் பெறுகாவண்ணம் ஒருவகை தேடவேண்டும்.

பால்ய விவாகம், நாடார்கள் சமூகத்தில் விர்த்தியாகிக் கொண்டிருக்கிறது. விதவைகள் பெருகுவதற்கு இந்த முதற்காரணம். பால்ய விவாகத்தால் தம்பதிகள் இருபேரும் பலங்குன்றி சொற்பக் காலத்திலமாண்டுபோவதுடன் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் பலங்குன்றி அற்பாயுளோடு காலகதியடைகின்றனர். சுமார் 30 வருஷங்களுக்குமுன்னிருந்த தேகதிடமுள்ள மனிதர்களைப் போல் இப்போது பார்ப்பது மகா அரிதாயிருக்கிறது தேகபலம் போனால் அறிவும் குறைந்து ஆத்மபலமுங் கெட்டு சந்ததி விர்த்தியும் பலஹீனமுள்ளதாய்ப் போகின்றது. மேலும் வேதாந்த விதிப்படி ஸ்நானம் பானம் யோகம் முதலியவைகளை அனுஷ்டிப்பதும் நின்றுபோய் விட்டது. இகலோகவாழ்க்கையிலீடுபட்ட எந்தமனிதரும் முதலாவது தேகம் ஆரோக்கியமாய் இருப்பதற்கேற்ற முறைகளைக் கையாடல் வேண்டும். வேதாந்தசாஸ்திரங்களை கற்று தேக உருப்புகளுக்கும் பலந்தரக்கூடிய பிராணயமங்கள் செய்து ஆயுள் விருத்திக்கு மிதாகாரங்களையும் மரக்கறி பதார்த்தங்களை யுண்டும், பழவர்க்கங்களைப் புசித்தும் சரிகைகிரிகை யோக ஞான முறைகளை சரிவரத் தெரிந்தும் சன்மார்க்கவழியில் நின்றும் தத்துவ நிலைபுணர்ந்து சர்வஜீவதயாபரனை சதாதியானித்தும் மேன்பாடடையத்தக்க வேதாந்த சபைகள் எங்கும் பரவவேண்டும்.

மேலும் சிறுவர்களுக்குத் தேகப்பயிற்சிக் கேற்ற சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். நாடார்களில் சிலம்பப் பயிற்சிக்காரர்களும் தேகப்பயிற்சியுடையவர்களும், தற்காலத்தில் அரிதாயிருக்கிறது. இப்பிரதானத் தொழிலைஇன்னுஞ் சிலயிடங்களில் பால்யத்திலிருந்தே கையாண்டு வருகிறார்களென்றாலும், வியாபாரத் துறையிலுள்ளோர் இத்தொழில் மேல் அறுவெறுப்புடையவர்களாய் அறவே விட்டுவிட்டார்கள். ஒவ்வொரு மனிதனும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் அற்ப விஷயத்திற்கும் அன்னியன் உதவியை எதிர்பார்த்திருப்பது அசாத்யமானது. இடறி விழுந்தால் பிறருதவியன்றி எழுந்திருப்பதற்கான சக்தியுடையவர்களாக வாவது இருத்தல் வேண்டும். வியாபாரி மக்களாயிருந்து சிலம்பக்கூடத்திற்குப்போய் பயிற்சி பெற வெட்கமுண்டாகுமானால் அவரவர் வீட்டிலுள்ளேயே எலும்பும், நரம்பும், இரத்தமும், சதையும், மூளையும் விர்த்தியாகி நீண்ட ஆயுளோடிருக்கத்தக்க பயிற்சிகளையாவது செய்தல் வேண்டும். இப்பேர்க்கொற்ற மேன்பாடுடைத்தான காரியங்களை வெகு விறைவாக விருத்தி செய்து கொள்வோமானால் நாடார் சமூகத்தில் ஜனவிருத்தி வளர்ந்தோங்கி விதவைகள் தொகை வரவரக் குறைந்துபோகுமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இவ்விசேஷ ஞானங்களை ஜனசமூகத்துள் நிறப்புவதற்கும் நிவர்த்திக்கு மார்க்கத்தை கூடிய சீக்கிரம் பார்த்தனுபவிப்பதற்கும் இப்போது நாடார் மகாஜன சங்கம் ஒன்றிலிருந்து செய்யும் வேலை போதாது. நாடார் சமூகத்துள் இன்னும் பற்பல சங்கங்கள் ஆங்காங்கு தலைகாட்டல் வேண்டும், அதாவது ஜனவி விருத்திச் சங்கம சமூக ஊழியச் சங்கம், சன்மார்க்கச்சங்கம், வேதாந்த விருத்திச் சங்கம், ஆத்மானந்த சங்கம், ஆசாரசீர்திருத்தச் சங்கம், தேகபயிற்சிச் சங்கம் மற்றும் பல நன்மைதரத்தக்க பல சங்கங்கள் உண்டாக்க வேண்டும். அந்நன்வழி நடக்க ஜனங்களைத் தயார்ச் செய்யவும் வேண்டும். அதற்கேற்றவாறு பொருமையபூஷணமாய்க்கொண்டுள்ள ஜனதலைவர்கள் முன்வரல் வேண்டும்.

சுவாமி இராமதீர்த்தர் பின்வருமாறு கூறுகின்றார், "வேதாந்தத்திற்கு பிறப்பிடம், ஆத்மப்பயிற்சிக்கு உறைவிடம் இந்தியா தேசம். ஏகதத்துவத்தின் ஊற்றுக்கண் சர்வமும் ஒன்று என்ற கொள்கையே உற்பத்தியான இடம், கடவுளைப்பற்றிய அறிவு, ஆத்மஞானம், தத்துவஞானம், தன்மதிப்பு, பக்தி, சிரத்தை, முதலியன நிறைந்ததான கங்காநதி பெறுகிவருங்குன்றம். அவ்விதப் பெருமைகளையுடையதான இந்தியா தற்காலம் அனுபவ வேதாந்தத்தை அறிய வில்லை யென்றால் ஆச்சரியமல்லவா. இதுதான் இந்தியா தாழ்ந்துபோனதற்குக் காரணம். எந்தத்தேசசமூகமும் முதலில் ஆத்மப்பயிற்சி குறையாமல் மற்ற அம்சங்களில் குறைந்து விடாது. இப்போது ஒவ்வொரிடங்களிலிருந்து சமூக நன்மைக்காக பாடுபடுஞ் சங்கங்களேனும் மேற்கண்ட சன்மார்க்கவழிகளைப்பற்றி தீர்க்காலோசனை பண்ணிச் செய்து முடிக்கமுன்வருமாறு வேண்டுகின்றோம்.

## தக்ஷிண மகா நாடு.

(நமது நிருபரிடமிருந்து.)

### நான்காவது கூட்டம்.

புண்ணிய தீர்த்தங்களில் மிகச் சிறந்த தாம்பிரவர்ணி யெனும் நதிக்கரையில் திருக்கோயில் கொண்டெழுந்த திருவிளையாடல் புரிந்து வரும் ஸ்ரீ சேர்மன் அருணாசல ஸ்வாமிகளின் ஆலயத்தில் வருடமிருமுறையில் அமாவாசை உற்சவங்களில்ஆடி தைமாதங்களில்கிரமமாக மகாநாடு கூட்டிக் கொண்டு வந்ததுபோல் இம் மாதம் 16வ தை அமாவாசையில் மகாநாட்டுக்கென்றே நிர்மாணிக்கப்பட்ட சிங்காரப் பந்தலின் முன்பு கூடிற்று. வழக்கப்படி தாம்பிரவர்ணி ஆற்றின்கண் உள்ள மணல் மேட்டில் மகாநாடு கூடும் வழக்கம். ஆற்றில் பிரம்மாதமான வெள்ளம் உண்டாகி, கரைபுரண்டோடினமையால் நம் மகாநாடு கோவிலுக்கு நேர் மேற்கே கூடுவதாயிற்று. ஏராளமான ஜனங்கள் விஜயஞ் செய்தார்கள்.

அவ்வமயம்மாவீபெண்ணை ஸ்ரீமான் ஏ. ராஜநாயகம் நாடாரவர்கள், ஆண்டிபட்டி, பிரபல வியாபாரியும், நாடார் மகாஜன சங்க கௌன்ஸில் மெம்பருமாகிய ஸ்ரீமான் ப. வே. தா. மாரியப்பநாடாரவர்களை இம்மகாநாட்டிற்குத் தலைவராகத்தேர்தெடுக்க வேண்டுமெனப் பிரரேபிக்க நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர், கனம் K. M. கோபால்சாமி நாடாரவர்கள் ஆமோதிக்க ப. வே. த. மாரியப்பநாடாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

திருத்தங்கல் மகா-ள-ள-ஸ்ரீ க. அய்ய நாடாரவர்களால் கடவுள் வணக்கம் சொல்லப்பட்டது.

நாடார் மகாஜன சங்கப் பிரசாரகர் ஸ்ரீமான் K. M. கோபால்சாமி நாடாரவர்கள் "நாடார்மகாஜன சங்கமும் நமது கடமையும்" என்பதைப்பற்றிநீண்டநேரம் பேசினார்கள். பிறகு மாவீபெண்ணை, நாடார் மகாஜன சங்கக் காரியதரிசி, ஸ்ரீமான் ஏ. ராஜநாயகம் நாடாரவர்கள் நாடார்களும் "ஒற்றுமையும்" என்பதைப்பற்றிப் பேசினார்கள்.

### முக்கிய தீர்மானங்கள்.

1. "இவ்வூரிலும் சுற்றிலுமுள்ள நம் நாடார் சமூகத்தவர் அனைவரும் சிநேகசங்கங்களையும், வாசகசாலைகளையும் யாதொருதாமதமின்றி உடனே நியமனம் செய்யும்படி இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்று நமது சங்கம்பிரசாரகர் கனம் K. M. கோபால்சாமி நாடாரவர்கள் பிரரேபிக்க, திருத்தங்கல், ஸ்ரீமான் க. அய்ய நாடார் அவர்கள் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது.

2. "நாளது வரை சேர்மன் கோவில் விஷயமாக நியமிக்கப்பட்ட சீர்திருத்தக் கமிட்டியார் தங்கள் கடமையைச் சிறிதும் செய்யாது வீணே இருப்பதற்கு இம் மகாநாடு பெரிதும் விசனிப்பதுடன், உடனே ஷை கமிட்டியார்கள் தங்கள் கடமையை கிஞ்சித்தும் வழுவிலாது செய்யும்படி இம்மகாநாடேற்புறுத்துகிறது" என்று மூலக்கரை ஸ்ரீமான் சிவராமகிருஷ்ணபாண்டிய நாடார் அவர்கள் பிரரேபிக்க அதை மாவீபெண்ணை ஸ்ரீமான் ஏ. ராஜநாயகம் நாடார் அவர்கள் ஆமோதிக்க சபையோர்கள் சர்வபரிபூரணமாக ஆதரிக்க தீர்மானம் நிறைவேறியது.

3. "தலைக்கட்டு வரிகளை வசூலித்து உடனே நமது நாடார் மகாஜன சங்கத்திற்கு அனுப்பியும், நமது மகாஜன சங்கத்திற்குக் கட்டாயம் ஒவ்வொருவரும் அங்கத்தினராகச் சேர்ந்தே தீரவேண்டுமென இம்மகாநாடு வேண்டிக் கொள்கிறது" என்று கனம் ஏ. ராஜநாயகம் நாடார் அவர்கள் பிரரேபிக்க அதை ஸ்ரீமான் சிவராமகிருஷ்ணபாண்டிய நாடாரவர்கள் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது.

4. ஒவ்வொரு நாடாரும் தூத்துக்குடியில் நமது சமூகத்தவர்க்கென்றே ஏற்படுத்தப்பட்ட நமது நாடார் பாங்கில் கட்டாயம் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், நமது குல நலத்தைக் கோறி கைமாறு கருதாது உழைக்கும் நமது குலப்பத்திரிகைகளை நம் சமூகத்தவர் யாவரும் எளியோர் வலியோர் என்றபேதமின்றி ஆதரிக்கவேண்டுமென்று இம் மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்று கனம் K. M. கோபால்சாமி நாடாரவர்கள் பிரரேபிக்க, கல்போது, ஸ்ரீமான் ஞா. ச. பொன்னுயிரபாண்டிய நாடாரவர்கள் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது.

பின்னர் தலைமை வகித்துள்ள ஸ்ரீமான் ப. வே. தா. மாரியப்ப நாடாரவர்கள் பின்னுரையாகசாங்கோபாங்கமாக

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## பழமொழித் திரட்டு.

**பெருமாள் இருக்கிறவரையில் திருநாள் உண்டு** என்பதுபோல் உலகத்தில் பேராசை, அகங்காரம், சுயநலம், பொறாமை முதலிய தீயகுணங்கள் இருக்கிறவரையில் யுத்தம், சாதிச்சண்டை, மதச்சண்டை, கலகங்கள் காட்டுக் குழப்பங்கள் கொள்ளை கொலை களவு இல்லாமல் போகாது என்பது உண்மை.

**அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி** என்பது பழமொழி. உலகத்திலுள்ள ராஜாங்கமுறைகளில் தர்மமோ அதர்மமோ எப்படி தலை தூக்கி நிற்கிறதோ அப்படித்தான் அந்தந்த ராஜ்யத்திலுள்ள குடிஜனங்களிடத்திலும், தர்மமும் அதர்மமும் தங்கி நிற்கும். தற்காலத்திலுள்ள உலகச் சரித்திரத்தை சற்று உற்றுநோக்கினால், ஒவ்வொரு தேசமும், தான் சுயேச்சையாயும், சுகமாயும் வாழவேண்டுமென்றும் மற்றவர்கள் இயாதானல், தனக்கு ஒன்றுமில்லையென்றும், தான் எஜமானாயிருக்கவேண்டும் மற்றவர்கள் தனக்கு அடிமையாயிருக்கவேண்டுமென்றும், தன்னை மற்ற தேசங்கள் மதித்து நடக்கவேண்டுமென்று தன்னுடைய ஆதிக்கத்திற்கும் அதிகாரத்திற்கும் சிறிதும் பங்கம் வரக்கூடாதென்றும் தான் நினைப்பதுபோல் மற்றவர்கள் நினைப்பதாவது செய்வதாவது கூடாது என்று ஒவ்வொரு தேசங்களும் எண்ணுகின்றன. இப்படித்தான் நமது இந்திய தேசத்திலும், இராஜாங்க முறையில் தங்களுக்கு அதிகப்பாத்தியதை வேண்டுமென்று எண்ணுகின்றனர் சிலர். பின்னுமொரு சார்பார், ஆங்கிலேய ஆட்சியின்று, சுயஆட்சி பெறவேண்டுமென்று சொல்லி, சதா பிரசங்கம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் இவர்களைப்போல் தேசமகாஜனங்கள் யாவரும் சம அந்தஸ்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லுவதையே கேட்கச் சகிக்காதவர்களாயிருந்தார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக, எல்லோரும் சமமாய் தான் இருக்கவேண்டும் அப்போது தான் சுயராஜ்யம் வருமென்று காரியத்தில் காட்டாவிட்டாலும், பேச்சளவில் சொல்லிக்கொள்ளவாவது கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதுவும் நாந்திமான், காரியத்தில் காட்டவேண்டுமென்று சதா வற்புறுத்தி வந்ததை போலிப் பாவனைப்புலிகள் பேச்சளவிலாவது பேசக் கற்றுக்கொண்டது ஒருவாறு போற்றத்தக்கது. இதற்கு நாம் வருந்துவதில் பயனென்ன? உலகத்திலுள்ள வல்லரசுகளே இப்படி நடந்துகொண்டு வரும்போது, நமது தேசத்திலுள்ளவர்களை சொல்லுவதில் பயனென்ன?

**இராமக்கா என்ன அக்கா? அது பொய்யக்கா** என்ற இடைநாட்டுப்பழமொழியை அனுசரித்து, இரண்டொரு ஆண்டுகளுக்கு முன், நமது தமிழ்நாடெங்கும் இராமக்காள் வரப்போகிறாள் என்று கட்டுகதை ஒன்று கற்பனை செய்யப்பட்டு, வீடுகள் தவறாமல் நாமம் போடப்பட்டது, நமது நேயர்கள் தெரிந்ததே. அதுபோல், உலகசிரேஷ்டரென மதிக்கப்படும் உத்தமரான மகாத்மாகாந்தியவர்கள் எரவாடாச் சிறைசாலையில், சஞ்சலமேலிட்டு மனோவியாதியால் சித்த சுவாதீனமில்லாமலிருக்கிறார் என்ற கட்டுக் கதையை பத்திரிகைகள் தவறாமல், ஒன்றைப்பார்த்து ஒன்றாக, அதுபற்றிய விஷயத்தை எழுதிக் கொண்டுவந்தது வியசனிக்கத் தக்கது. மறுபடியும் ஒவ்வொரு பத்திரிகையும் அது விஷயத்திற்கு ஆதாரமில்லை என்று எழுதிக்கொண்டு வருகின்றன. இந்த விஷயத்தின் உண்மை அறியவேண்டிப் பத்திரிகைகளின் நிருபர்களும் பிரபலத் தலைவர்களும் மற்றும் அவர்மேல் அபிமானமுள்ளவர்களும், அவர் இருக்கும் சிறைச்சாலைக்கு ஓடோடிப் போயிருக்கிறார்கள். இதுதவிர எத்தனையோபேர்கள் தேசத்தின் நானுபக்கங்களிலிருந்தும், சிறைசாலைசூப்பிரண்டெண்டுக்குதந்திக் கொடுத்தும் விஷயத்தை அறிந்து ஆறுதல் அடைந்திருக்கிறார்கள். முற்றும் ஆதாரமற்ற இந்த விஷயத்தை கட்டிவிட்ட ஆசாமி முன் இராமக்காள் கதையை கட்டிவிட்ட ஆசாமிக்கு சற்றும் விட்டுப்போனதாகத் தெரியவில்லை. ஏனென்றால், முந்திய ஆசாமிபெரும்பாலும் பாமர ஜனங்களை ஏமாற்றமடையச் செய்து, யாதொரு செலவில்லாமல் வீட்டு கதவில் நாமம் மட்டும் போடச் செய்தார். பிந்திய ஆசாமியோபடித்தவர்களை ஏமாற்றி, பணச்செலவு செய்யச்செய்ததோடு, சிறிது பயமுங்கொள்ளும்படி செய்துவிட்டார். பேஷ் இவரின் பெருமை மெச்சத்தக்கது!

**தெற்கே யடித்தகாற்று திரும்பி யடித்துவிட்டது** என்பதைப்போல், நமது இந்திய தேசமானது, கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன், பல அரசர்களாலும் நீதி தர்மமுறை தவறாமல் ஆட்சி செய்ததின் பயனாக ஒற்றுமையுடன் சுகவாழ்வு வாழ்ந்து வந்ததோடு. இதர தேசங்களும், இதன் வளப்பங்களையும், மகாஜனங்களின் பழக்கவழக்கங்களையும் அவர்களுடைய நடையுடைய பாவனைகளையுங்கண்டு தாங்களும் அவ்வாறு முன்னேற்றமடைய வேண்டுமென்று, முயர்ச்சித்தது முண்டு. பின்னிட்டு, அரசர்களுக்கு ஒற்றுமையற்று, பேராசை கொண்டு, ஒருவரை ஒருவர் நசித்துவிட எண்ணி யுத்தங்கள் பல நடத்தினதின்பயனாக, இந்தியர்கள் தற்சமயம் இக்கதிக்குஆளாகி அன்னியர் ஆட்சிக்குட்பட்டு அடிமை வாழ்க்கைப்பட நேர்ந்தது. இப்படிப்பட்ட நிலைமைக்குவந்துங்கூட, நமது தேசத்திலுள்ள சில நெல்லிக்காய் மூட்டைகளுக்கு புத்திவந்தபாடில்லை. இன்னும், ஜாதியிருமாப்பு போனபாடில்லை. தெற்கேயடித்த காற்று திருப்பி அடிக்கிற தென்பதைபோல, நமது தேசத்தை பிடித்து ஆட்டி அலையவைத்த மேல் காட்டி, குணதோஷங்கள், இப்போது மேல்காட்டார்களைப்பிடித்துக்கொண்டதென்று தாராளமாய்ச் சொல்லலாம். ஏனென்றால், சென்ற நான்கு வருஷங்களாக ஒவ்வொரு தேசங்களும் விடாமல் தொடர்ந்து நான்கு வருடங்கள் சண்டை செய்து அலுத்துபோய் அவதிப்பட்டுக் கொண்டு ஒவ்வொரு தேசத்திலும் பொருளாதார நிலைகுன்றி, தேப்பொது கடன் கண்விழிகலங்கும்படியாய் அழுத்தங்கொண்டிருக்கும்போதே மறுபடியும் சண்டை செய்யத் தலைதூக்கி நிற்கின்றன. இப்படி பேராசை, அகங்காரம் முதலியதீய குணங்களால் சண்டைசெய்ய முறபட்டு நிற்கும்போது தெற்கே அடித்தகாற்று திரும்பி அடித்துவிட்டது என்று நாம் ஏன் சொல்லக் கூடாது?

---

...ப்பிரசங்கமாரி மொழிந்தார்கள். கல்லும் கரையுமாறு பேசிய நமது மகாநாட்டுத் தலைவர், முன்தலைமைவகித்த மாபெருந் தலைவருக்கொப்பான சிறந்தவர்தானென வெ!சிற்றிடையும் அய்யங்கொள்ளாத க்ஷத்திரிய வீரசிங்கம்போல் கர்ஜித்து இனிமையுடன் மகாநாட்டைச் சிறப்பித்தார்கள். தலைவரவர்களுக்கும் பிரசங்கம் புரிந்த குலாபிமான சிறுவராலும் பெரியாரெனக் கொண்டாடும் நம் உபந்நியாசகர்களுக்கும் தாயபிச்சிமலரோடு செவந்தி மலர்தொடுக்கப்பட்ட புஷ்பஹாரங்கள் சூட்டப் பெற்று, மகாநாட்டைச் சிறப்பித்து நடத்திய தலைவருக்கும், உபந்நியாசர்களுக்கும் இத்தகைய சிறப்புடன் நம் நாலாவது மகாநாடு நடைபெற அரும்பெரும் உதவிநல்கிய ஸ்ரீமான் வீ. பொன்னுச்சாமி நாடார் (ஏறல் சவுளிவர்த்தகம்) அவர்களுக்கும், மற்றும் பொருள்விதத்திலும் தளர்ச்சியிலா ஊக்கங்கொடுத்த மாபெருங் குலாபிமானிகளான சிறந்தண்ட கல்லூர் அபிமானிகளுக்கும் வந்தனங்கள் செலுத்தி மகாநாடு முடிவுபெற்றது. சுபம்!

---

## அறிவிப்பு.

நமது சுற்றுப் பிரயாண ஏஜெண்டுகள் சுற்றுப் பிரயாணஞ் செய்து ஆங்காங்கிருந்து எழுதுவதிலிருந்தும் மற்றும் நமது மித்திராபிமானிகள் ஆங்காங்கிருந்து எழுதும் கடிதங்களிலிருந்தும் தற்சமயம் அறுவடை காலமாயிருப்பதால் கிராமாந்திரங்களில் பணக் கஷ்டமாய் இருக்கிறதென்று அறிகிறோம்.

ஆனால், நாட்டின் நிலைமையையும் காலத்தையும், நேரத்தையும் அனுசரித்தே நாமும் பணவசூல் செய்யவேண்டியதிருக்கிறது ஆகையால், சிற்சில முக்கிய ஊர்களுக்கும், நகரங்களுக்கும் தவிர கிராமாந்திரங்களுக்கு மாசிமீ 15 தேதிக்குமேல் வி. பி. அனுப்பப்படும். (ஆனால் அதற்கு முன்னதாகவே மணியாடர் மூலமாய் சந்தாத் தொகையை அனுப்பினாலும் ஆறு அணா விலை மதிப்புள்ள விருதுபட்டி ரிப்போர்ட்டு புஸ்தகம் இனமாக அனுப்பப்படும்.) ஆகையால், கிராமாந்திரங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள் நன்கு கவனித்து மாசிமீ 15 தேதிக்குமேல் அனுப்பப்போகிற வி பி. யை திருப்பி விடாமல் எதிர்பார்த்திருந்து பணங்கட்டி பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம். மானேஜர்.

---

## கொல்லத்திற்கு ரெயில் போட்டும், கோட்டித் தனமா ?

என்ற இடைநாட்டுப் பழமொழி பொய்யல்ல, மெய்தான் என்பதை ரூபிக்க மிஸ்டர் நானுபிள்ளை கிளம்பியிருக்கிறார். அதுவும் கொல்லம் பிரதேசத்திலிருக்கும் இவர்க்கும் இவருடைய செய்கைக்கும் எண்ணத்திற்கும், மேல்கண்டபழமொழி பெரிதும் பொருத்தமுடையதானது ஒரு அரிய சம்பவமென்றே நினைக்கவேண்டியதிருக்கிறது. மிஸ்டர் நானுபிள்ளையவர்கள் தன்னுடையபிரதேசமாகிய, கொல்லத்துக்கு ரெயில்போட்ட பிற்பாடு நமது பக்கம் பிரயாணம் செய்திருக்கமாட்டார்போல்தெரிகிறது. ஏனென்றால் இவர்நாடார்கள் விஷயத்தில் நடந்துகொண்டமாதிரியிலிருந்தும்உலகம் தற்சமயம் முன்னோக்கிக்கொண்டிருக்கும் போக்கையும், காலச்சக்கரவேகத்தின் தன்மையையும், இயல்பையும் அறியாமல் அசட்டுத்தனமாய்ப் பேசியமாதிரியிலிருந்தும், யூகிக்கவேண்டிய திருக்கிறது. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்? என்றதுபோல், பிறந்த இடத்தை தவிர பிறிதிடம் அறியாதவரும், ஜாதிஇறுமாப்பினால் உலகஞானத்தை அறியாதவரும், பொறாமையேஒருருவாய்வந்தவருமானநமது நானுபிள்ளையவர்கள் சந்தர்ப்பத்தை அறியாமல் வாய்மதமேறிப்பேசியிருக்கும்பேச்சை அறிவுடையயாவரும் வெறுப்பார்களென்பதில் சிறிதும் ஐயமில்லை.

நமது நானு பிள்ளையவர்களைப் பற்றி இப்படியே வர்ணித்துக்கொண்டு போனால், கனம் பிள்ளையவர்களை யார் என்று அறிய நேயர்கள் ஆவலுள்ளவர்களாயிருப்பது இயல்பே.

இவர்தான் குமாரக்கோவிலில் நடந்த கலகத்திற்கு ஆதிகாரண புருஷர். "தொட்டிலையும்ஆட்டி பிள்ளையையும்கிள்ளுகிறது" போலபாதுகாக்கவந்துபாமரஜனங்களை கலகத்திற்கு கிளர்ச்சி செய்த ஆசாமி இவர்தான். கடந்தவாரத்தில் வெளிவந்த (11-1-23) நாடார்குல மித்திரனில் அக்கினிக்காவடியும் அடிபிடியும் என்ற தலையங்கம் தாங்கிய வியாசத்தை நேயர்கள் கண்ணுற்றிருக்கலாம். அதில் கனம் லட்சுமண பிள்ளையவர்கள் ஒருவாறுஉண்மைத்தன்மையோடெழுதியிருக்கிறாராயினும், நமது நானுபிள்ளையை பூராவும் மறைத்தும், நாடார்கள் பட்ட கஷ்டத்தையும் காட்டாமல் பொதுவாக எழுதியிருப்பது ஒருவாறு விசனிக்கத்தக்கதே.

உண்மையைஉரைக்க வெளிவந்தநமது லட்சுமண பிள்ளையவர்கள் தன் இனத்தவரான நானு பிள்ளையினுடைய அடாத செய்கையை;மறைத்து எழுதியிருப்பது ஒருதலைப் பக்ஷமுடையவர்களின் செய்கையை ஒக்குமென்பதைக் குறிப்பிடாமலிருக்கமுடியவில்லைகனம்லட்சுமணபிள்ளையவர்கள், நானுபிள்ளையவர்களைப்போலொத்தபோலிகள் ஜாதியிருமாப்புடன் நடந்து கொண்ட நடத்தைகளைக்கண்டுசகிக்காமல் பொதுவாகபிராமணர்கள்,பிள்ளைமார்கள்அக்கிரமமாய் சாதித்துவேஷத்துடன் நடந்து கொண்டார்கள் என்று எழுதியிருப்பதற்கே ஒருவாறு போற்றவேண்டியது நமது கடமையாகிறது.

சோளதேசத்திலிருந்து மலையாள பாஷையில் வெளிவரும் "மிதவாதி" என்ற பத்திரிகையில் இச் சம்பவத்தைப்பற்றிய விஷயத்தை மலையாள தேசத்து நண்பரொருவரைக் கொண்டு வாசித்துக்கொண்டு வரும்போதே லக்ஷக்கணக்கானஜனங்களுக்கிடையில் நாடார்கள்மட்டும் அனுபவித்த கஷ்டங்களையும் நஷ்டங்களையும் பற்றி எழுதியிருக்கும்பாகத்தை வாசிக்கும்போது, அந்த நண்பரின் கண்களிரண்டிலும் நீர் கோர்த்து, உள்ளம் புழுங்கி, தேகம் சோர்வுற்று, வாய் குளறி, ஒழுங்குபட அர்த்தம் உரைக்கமுடியாதபடி நேர்ந்த சம்பவத்தை நினைத்துஎழுதும்போதே கைநடுங்குகிறதென்றால், அன்று அச்சம்பவத்தை நேரில்கண்ணுற்றவர்களின் உணர்ச்சி எந்தவகையதாயிருந்திருக்குமென்பதை ஈண்டு எழுதி விஸ்தரிக்கவும் வேண்டுமோ! அந்தக் கோவிலுக்கு மேல் புறத்திலிருந்து போகக்கூடிய விஸ்தீரணமுள்ள ஒரே பாதைதான் இருப்பதுபோலவும் ஒருபக்கத்தில்குளமும் மற்றொரு பக்கத்தில் வயல்களும் இருப்பதுபோலவும் தெரிகிறது.

லக்ஷக் கணக்கான ஜனத்திரளுடன் காவடி, மேல் திசையிலிருந்து கோவிலுக்கு சமீபத்தில் வந்தவுடனே, மிஸ்டர் நானுபிள்ளையவர்கள் வெகு ஆவேசத்துடன் பாய்ந்து காவடியை அதற்குமேல்வரவொட்டாமல் தடுத்திருக்கிறார். காவடிகொண்டுவந்த பக்தனும் அவனைச் சார்ந்த நாடார்களில் சிலரும். "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்டதேதியில் எப்படியும் எங்கள் கோரிக்கையை பூர்த்திபண்ணிக்கொள்ளுவது எங்கள்கடமை. அதற்குஎவ்விதத்திலும்அடங்கலேற்படக்கூடாதென்று எண்ணியே முன்னதாகவே, கவர்ன்மெண்டாருக்கும் அறிவித்திருக்கிறோம். ஆகையால் எங்களை இப்படித்தடுப்பது அடாத செய்கையே" என்று வாதித்தார்களாம்.

இந்த சந்தர்ப்பம் மிகவும் முக்கியமானதும், கவனிக்கத்தகுந்ததும், பல நிகழ்ச்சிகளுக்கும், [illegible] நடக்கும்பல அசந்தர்ப்பமான சம்ப[illegible]ங்களுக்கும் முக்கிய காரணமாயுள்ளது. [illegible]னென்றால் ஒரு சார்பார் தங்கள் தெய்வக்கடனைநிறைவேற்றிவைப்பதில் கண்ணும்கருத்துமாயிருந்திருக்கிறார்கள். மற்றொரு சார்பார் சாதித்துவேஷத்துடனும், அகங்காரத்துடனும் எப்படியும் அன்று நடக்கும் காரியத்தை அடங்கப்படுத்திவிடவேண்டுமென்று எண்ணி, அதற்கு பத்து நாளைக்கு முன்னமே, பாமர ஜனங்கள் மத்தியில் பொய்க் கதைகளையும் தப்பபிப்பிராயங்களையும், பரவச்செய்து கலகத்திற்கு தயாராக இருந்திருக்கிறார்கள். இன்னொருசார்பார் மாசற்றமனதுடன், மதாபிமானமுள்ளவர்களாய், மெய்பக்தனின் கோரிக்கை ஆதிபகவான் சன்னதியில் எப்படி நிறைவேறுமோ என்று அன்பு கசிந்த உள்ளத்துடன், சூரியபகவானுடைய உக்கிரத்தையும் சகித்துக்கொண்டு, அன்று நடக்கப்போகும் காக்ஷி தங்களுக்குப் பார்க்க கிடைக்குமோ கிடைக்காதோ! என்று பக்தனின் வரவை வெகு ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருந்திருக்கிறார்கள் (இப்படிப்பட்டவர்களின் தொகுதியே அன்று அதிகம்) பிரிதொரு சார்பார் எவ்வித சச்சரவும், குழப்பமும் நடக்காதபடி சமரஸ பான்மையுடன் காரியம் நடைபெறுவதிலேயே, கண்ணும் கருத்துமாயிருந்திருக்கிறார்கள். இந்தநேரத்தில்காவடி தடைபட்டு நின்றவுடனே, நானாவித அபிப்பிராயமுடையவர்களும் தங்கள் எண்ணம் எவ்விதமாகுமோ என்று எக்கமுற்றவர்களாய் முடிவை எதிர்நோக்கிக்கொண்டுஇருந்திருக்கிறார்கள். ஜனக்கூட்டமோ அளவற்றது! இப்படிப்பட்ட சமயத்தில் ஒருவன் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குச் சாடினாலும், கை, கால்களை ஆட்டி ஒருவர் பேசநேர்ந்தாலும், அவசர நேரத்தில் கருத்தை உணராமல் தப்பபிப்பிராயம் பிறப்பதோடு, அசந்தர்ப்பமான காரியம் நடப்பதற்கு காரணமாய் முடியுமென்பதைக் குறிப்பிடவேண்டியதில்லை.

இப்படிப்பட்ட சிக்குமுக்கான சந்தர்ப்பத்தைக் கவனியாமல், சமரஸபான்மையை நாடிவந்த கனம் நானுபிள்ளையவர்கள், கைகால்களை நீட்டியும் ஆட்டியும், உறத்தகுரலுடனும், அடாதுடியான வார்த்தைகளுடனும், ஜாதி யிறுமாப்புடனும்நாடார்கள்இவ்வழியாகவரவேகூடாதுஎன்றும் வயல்வரப்பிலும் குளக்கரையிலுமுள்ள ஒத்தடிவழியாகத்தான் போகவேண்டுமென்றும் பிடிவாதமாய் கூறினாராம். எண்ணிறந்த ஜனங்களுக்கிடையில்நாடார்கள்மட்டும்அவ்வழியாய் போகக்கூடாதென்று வாதித்ததின்காரணம் தெளிவுபடத் தெரியவில்லை. அவருடைய அடாதுடியான வார்த்தைகளும், மிரட்டு ஆட்டு செய்கைகளும், சமயம் எப்போவென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த விஷமிகளுக்கு சாதகமாய் முடிந்துவிட்டது. ஆகவே தன்பொறுப்பையும், ஜனத்திரளின்நிலைமையையும்,நோக்கத்தையும், கவனியாமல் நமது நானுபிள்ளையவர்கள் ஒரு சார்பாக இருந்து பேசியதே குழப்பதற்கு காரணமாய் முடிந்து விட்டது. மேலும் அந்த சந்தர்ப்பத்தில் அவர், ஜாதியை பழித்தும் இழித்தும் கூறியதாகத் தெரிகிறது. இவர் தம்ஜாதி மேன்மையை நம் க்ஷத்திரிய மித்திரன்அதிபரிடம் கேட்டால் வரிசைவரிசையாகவும் வகைவகையாகவும் சொல்லுவார் என்பதை, அவர் அறிந்திருந்தால் அன்று அப்படிப்பேசியிருக்கமாட்டார்என்பது உண்மை. இவருடைய செய்கையைஅப்பிரதேசத்திலுள்ள, "சமதரிசி" முதலிய உலகஞானம் அறியாத போலிப் பத்திரிகைகள் ஆதரிக்கும் கூற்றை மறுமுறையும் சமயமும், மித்திரனில் இடமும் கிடைப்பின் எழுதுவாம்.

P. T. R. மேனிநாதன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## செய்தித் திரட்டு.

### தெய்வீக விருட்சம்.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த மாவீடுபண்ணை என்னும் பேரூரில் ஒரே தன்மையான இருதெய்வீக விருட்சங்கள் தோன்றியிருக்கின்றன. அவை ஏறக்குறை பன்னிரண்டு வருடமாக அங்கு நின்றிருந்த போதிலும் அவற்றின் மகிமை சில நாளைக்கு முன்புதான் புலப்படுவதாயிற்று. முற்றத்துறந்த முனிசிரேஷ்டர் ஒருவர் அவ்வழியாக வந்தவர் அவைகளைக் கண்ணுற்றவுடன் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கி "மாதவப்பேறே! நீவிர்நிற்றற்குரிய இடம் இதுவோ? தெய்வப் பூங்காவனத்தில் நிற்றற்குரிய பெருமைவாய்ந்த நீவிர் கேவலம் இவ்வேரிக்கரையில் அமர்ந்ததென்ன? பெருமையை மதித்தற்குரிய மக்களும் இங்குளரோ?" எனப் போற்றினர். அது,கேட்ட கடும்பிணியாளி யொருவர் அவற்றின் இலையிற் சிலவற்றைப் பறித்துத்தின்றனராக, அவரை வருத்திய அப்பிணியானது சூரியனைக்கண்ட பனிபோல் உடனே நீங்கிவிட்டது.

இச் செய்தி விரைவில் ஊரெங்கும்பரவவே நோயாளிகளெல்லாம் ஓடோடியும் அங்குச் சென்று அற்புதமாய் சுகம்பெற்று நின்றனர். உடனே அவைநிற்கின்ற இடத்துக்கு உரிமையாளரான நாடார்கள் மங்கள வாத்தியத்துடன் அங்குவந்து அவற்றுக்குப் பாலால் அபிஷேகஞ் செய்து பந்தல் இட்டு நறுமலர் மாலைகள்தூக்கி தீபதூபநைவேத்தியங்களும் சிறப்புற நடத்திவைத்தார்கள். இப்போது ஒவ்வொருநாளும் மங்களகீத வாத்தியத்துடன் பூஜை நடந்து வருகிறது. ஜனங்கள் பல திசைகளிலுமிருந்து கூட்டகூட்டமாய் அங்குவந்து விடுகின்றனர். காணிக்கை விழுகிறது. சொந்தக்காரரான நாடார்கள் அத்தெய்வீக விருட்சத்தினடியில் எவ்வருணத்தாரும் சமமாக வந்து பயன்பெறுமாறு ஒழுங்குசெய்து அவ்வொழுங்கைக் கிட்டமாய் நிறைவேற்றி வருகிறார்கள். அங்குவருகிற ஜனங்களுக்குப் போந்த சௌகரியமும் செய்துகொடுக்கிறார்கள். சீக்கிரம் ஆலயமொன்று அங்கு எழுப்பிக்கப்படும். இம்மரங்கள் கடம்பாற்குளத்து வெளிச்சரிவிலுள்ள வயல் நிலத்துக்கருகில் நிற்கின்றன. இன்னுஞ் சில நாளைக்குள் இது ஒரு புண்ணிய ஸ்தலமாகக் கொண்டாடப்படும் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. என்று நமது நிருபர் எழுதுகிறார்

### ஒரு நல்ல அதிர்ஷ்டம்.

சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழைப் பெருக்கால் கரிவலம் வந்த நல்லூர் ஆற்றில் அகோரமான வெள்ளம் யேற்பட்டு ஆற்றினிருபக்கமுமுள்ள அநேக விளை நிலங்களை அடையாளந்தோன்றுவண்ணம் நாசப்படுத்தி விட்டது. தலைவன் பட்டிக்கிராமத்தாருக்கும் அநேக நிலங்கள் ஆற்றோரத்தில் இருந்தது. அதில் ஒரு நிலக்காரருக்கு ஒரு சாக்கிலே கட்டப்பட்ட மூட்டையொன்று மேற்படி நிலத்தோரம் இருந்த கள்ளிப்புதரில் வெள்ளத்தால் எதுக்குண்டு கிடந்திருக்கிறது. மேற்படியார் எடுத்து வீட்டுக்குக் கொண்டு வந்து பார்க்கையில் சில உண்கலங்களும் இரண்டொரு சொம்பும் ஒரு தோல் பைக்குள் ரூபாயும் பவுனும் நகைகளுமாக, ஆயிரரூபாய் பெறத்தக்க சொத்துக்கள் கிடைத்தனவாம். அந்த மூட்டை இடையன்குளம், கரிவலம்வந்தநல்லூர், மேலமரத்தோணி, கொண்டரெட்டிபட்டி முதலிய கிராமங்கள் ஆற்றால் அழிக்கப்பட்டபடியால் மேற்படி கிராமங்களிலிருந்துதான் வெள்ளத்தில் வந்திருக்கக்கூடுமென யோசிக்க இடமுண்டாகிறது மேலும் கதவுகள் நிலைகள் ஜன்னல்கள் முதலிய வீட்டுச் சாமான்களும் பனை முதலிய மரங்களும் திருவேங்கிட நகர் வாசிகளில் அநேகர் ஆற்றிலிருந்து எடுத்திருக்கிறார்கள். என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

* * *

1921 வருஷத்தில் சென்னை மாகாணத்திலுள்ள எல்லாநீதிஸ்தலங்களிலுஞ் சேர்த்து தாக்கலாகப்பட்ட பிராதுக்களை கணக்கெடுக்கப்பட்டதில் மொத்தம் 4 லட்சத்து 96 ஆயிரத்து 244 (496244) ஆகிறதாம் இதனால் சராசரி 85 ஜனங்களுக்கு ஒரு பிராது வீதமாகிறது. இம்மாகாணத்திலுள்ள ஜில்லாக்களெல்லாம் மலயாரிலும், தஞ்சாவூரிலுந்தான் அதிகமானது. அதாவது 49 ஜனங்களுக்கு ஒரு பிராது வீதம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் இவைகளின் பெருமானம் 136200000 ரூபாய் இருக்கிறதாம். என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சங்க விஷயங்கள்.

### க்ஷத்திரியநாடார் சமரச சன்மார்க்க சபை. திருத்தங்கல்.

இவ்வூர் நமது க்ஷத்திரிய நாடார் சமரச சன்மார்க்க மாதாந்தர சபை 2-1-23 யில்மாலை 8 மணிக்கு விநாயகர்கோவில் முன் பாரிசத்தில் கூடியது. அவ்வமயம் பல குலாபிமானிகள் விஜயம் செய்திருந்தார்கள். வழக்கம்போல் சந்தா தொகை நன்கொடைவசூலிக்கப்பெற்றுசங்கவரவு செலவு கணக்குகளை சரிபார்த்து சபை 7 மணிக்கு மங்களகரமாய் கலைந்தது என்று காரியதரிசி எழுதுகிறார்.

* * *

### நாடார் மகாஜன கிளைச்சங்கம் விளாம்பட்டி.

சர்வஜீவதயாபரனின் கிருபையால் நாளது 1922ஞு டிசம்பர்மீ 1உ வெள்ளிக்கிழமை இவ்வூர் நாடார்குல கனதனவான்கள் சுமார் 8மணிக்கு இவ்வூர் நாடார் கலாசாலையில் ஓர் கூட்டம் கூடினார்கள். இவ்வூர் வாசியும் சாத்தூர் பிரபல பஞ்சுவியாபாரியும் குலாபிமானியுமான ஸ்ரீமான் மா. ச. மு. புன்னவன நாடார் அவர்கள் இச்சபைக்கு அக்கிராசனாதிபதியா யிருந்தார்கள். பல குலாபிமானிகள் விஷயதானம் புரிந்தார்கள். சங்கத்தின் அங்கத்தினர்களாக சுமார் 46 கனவான் சேர்ந்தார்கள். ஸ்ரீமான் சு. மா. ஆறுமுக நாடார் அவர்களும், ச. திருப்பரங்கிரிநாடார் அவர்களும் இச்சங்கத்தின் பிரசிடெண்டாகவும், ரா. பெ. காளியப்ப நாடார் அவர்களும், A. M. S. அண்ணாமலைநாடார் அவர்கள் காரியதரிசிகளாகவும், வெ. அ. வ. அருணாசலநாடார் அவர்களும், சு. சுந்தர நாடார் அவர்களையும் மானேஜர்களாகவும் ஏகமனதுடன் நியமித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. என்று ஸ்ரீமான் சிதம்பர நாடார் எழுதுகிறார்.

* * *

### க்ஷத்திரிய நாடார் சாத்மீகப் பாலிய சங்கம், கிருஷ்ணப்பேரி,

2-1-23ல் மாலை 9 மணிக்கு பிரஸிடெண்டு ஸ்ரீமான் மா. க. அனந்தப்ப நாடார் அவர்கள் பக்திவிசேஷ நன்முயற்சியால் நடந்துவரும். ஸ்ரீரத்னசபாபதி கீதாமிர்த பஜனைச் சபையின் 4-வது ஆண்டு திருவாதரை உற்சவம் அன்று சிங்கார ரதவீதியில் ஸ்ரீ நடராஜர் திருவுருவப்படம் அமைத்து பக்திசிரோன்மணிகள் பஜனைகோஷ்டிசெய்ய, நகர்வலம் வந்து ஆனந்தகரமாய் நடைபெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

### உசிலம்பட்டி.

உசிலம்பட்டி க்ஷத்திரியகுல நாடார்கள் உறவின்முறை தர்மபரிபாலன மகமை சங்கம், சென்னவில் பெஷல்மீட்டிங்கில், (15-12-22) ல் உசிலம்பட்டி யூனியன்போர்டு பிரெஸிடெண்டும், மேற்படி க்ஷத்திரிகுல நாடார்கள் உறவின்முறை தர்மபரிபாலன மகமை சங்கம் பிரெஸிடெண்டுமாகிய ஸ்ரீமான் ப. வி. ஆதிமுத்துமாலை நாடாரவர்கள் செய்த பிரசங்கம் பின்வருமாறு:—

"எனதன்பிற் கிசைந்தசகோதரர்களே! நான் உங்களுக்கு ஓர் விளம்பரம் செய்ய பிரியப்படுகிறேன். அந்தவிளம்பரதின் லட்சியமானது சிறிதும் மாறுதலின்றி நிலைநாட்டப்படவேண்டு மென்பதே எனது விருப்பம். நமக்குளுள்ளபழமையான நேசக்கட்டுப்பாட்டை வலுப்படுத்தவேண்டுமென்பதுமட்டும் யெனது விருப்பமல்ல. கடவுளின் அருளை முன்னிட்டு பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் நெருங்கிய ஒற்றுமையும் உண்டாக்கி நேசக்கட்டுப்பாட்டை வலுப்படுத்தவேண்டுமென்பது யெனது விருப்பம். மேலும்பிரிவினைக்குரிய அசூசியானவார்த்தைகளை போக்கி, அபிமானத்தையும், சகோதரத்தன்மையையும்வளரச்செய்யவேண்டுமென்பது யெனது ஆசை. ஒரு தகப்பன், தனது குழந்தையின் நல்வாழ்விலே கருத்தாயிருப்பதுபோல் தன்னால் படைக்கப்பட்ட உலகத்தின் நன்மையிலே சதாகாலமும்கருத்தாயிருக்கின்றஈஸ்வரன் விசாலமாகிய சிருஷ்டியிலுள்ள எல்லா மனிதர்களும் ஒரு சமூக சரீரத்தின் நன்மையை விரும்பி படைக்கப்பட்ட பல அங்கங்கள்போலும் கருதி, வேலைசெய்து அபிவிருத்தியடையவேண்டு மென்பது நமது கடமையா யிருக்கவேண்டும். நமது கடமையை நிறைவேற்ற தனது சோதியாகிய கருணையை பரப்பி அருள்புரிய யெல்லலாம் வல்ல இறைவனைபோற்றி செய்வோமாக." என்று அபிவிருத்தியைக்கோரிநிற்கும் அங்கத்தினர் நமக்குஒருவர் எழுதுகிறார்.

## Census Report & Notes.

## ஜனசங்கையும் குறிப்புகளும்.

### மதுரை ஜில்லா.

| | |
|---|---|
| மதுரை ஜில்லா மொத்த ஜனத்தொகை | 2007082. |
| ஆண் | 987468. |
| பெண்கள் | 1019614. |
| கலியாணமானவர்கள் | 848259. |
| ஆண்கள் | 414916. |
| பெண்கள் | 433343. |
| விதவைகள் | 174061. |
| தாரமிழந்தவர்கள் | 42463 |
| இந்துக்கள் | 1862857. |
| மகமதியர்கள் | 78922. |
| கிருஸ்தவர்கள் | 65301. |
| மற்றமதஸ்தர்கள் | 2. |
| படித்தவர்கள் | 188669. |
| ஆண்கள் | 174340. |
| பெண்கள் | 14329. |
| படியாதவர்கள் | 1818413. |
| ஆண்கள் | 813128. |
| பெண்கள் | 1005285. |
| இந்துக்களில் படித்தவர்கள் | 163137. |
| ஆண்கள் | 152911. |
| பெண்கள் | 10226. |
| படியாதவர்கள் | 1699720. |
| ஆண்கள் | 761919. |
| பெண்கள் | 937801. |
| இந்துக்களில் ஆங்கிலேயம் படித்தவர்கள் | 12344. |
| ஆண்கள் | 15135. |
| பெண்கள் | 1671. |
| கிறிஸ்தவர்களில் மொத்தம் படித்தவர்கள் | 12518. |
| ஆண்கள் | 8833. |
| பெண்கள் | 3685. |
| கிறிஸ்தவர்களில் மொத்தம் படியாதவர்கள் | 52783. |
| ஆண்கள் | 24196. |
| பெண்கள் | 28587. |
| கிறிஸ்தவர்களில் மொத்தம் ஆங்கிலேயம் கற்றவர்கள் | 3959. |
| ஆண்களில் | 2594. |
| பெண்களில் | 1365. |
| மகமதியர்களில் மொத்தம் படித்தவர்கள் | 13013. |
| ஆண்கள் | 12595. |
| பெண்கள் | 418. |
| மகமதியர்களில் மொத்தம் படியாதவர்கள் | 65909. |
| ஆண்கள் | 27013. |
| பெண்கள் | 38896. |
| மகமதியர்களில் மொத்தம் ஆங்கிலேயம் படித்தவர்கள் | 502. |
| ஆணகள் | 489. |
| பெண்கள் | 13. |

### கல்வி விபரம்.

இந்தியாவில் மொத்தம், ஐந்து வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரிலும் ஒரு மைல் அளவுக்கு 119 பேர்கள் படித்திருக்கிறதாகத் தெரிகிறது. அதுபோல் ஆங்கிலேயம் படித்தவர்கள் ஒரு மைல் அளவுக்கு 12 பேர்கள் இருக்கிறார்கள்.

1921ஞு த்திய சென்ஸஸ்படி எல்லா மதஸ்தர்களும் நமதுமாகாணத்தில் 1000-க்கு ஆண்களில் படித்தவர்கள் 152-பேர்களும், பெண்களில் 1000-க்கு 21-பேர்களு மிருக்கிறார்கள். ஆனால் 1911ஞு த்தில் ஆண்களில் 138 பேர்களும் பெண்களில் 13 பேர்களுமிருந்தார்கள். 1901 ஞு த்தில் ஆண்களில் 119. பெண்களில் 9 பேர்களுமிருந்திருக்கிறார்கள்

### படித்த இந்துக்கள்.

1921ஞு த்திய சென்ஸஸ்படி 1000-க்கு ஆண்களில் 150 பேர்களும். பெண்களில் 18 பேர்களும், 1911 ஞு படி 1000 க்கு ஆண்களில் 135. பெண்களில் 11 பேர்கள் 1901ஞுபடி ஆண்களில் 116, பெண்களில் 7 பேர்கள்.

### படித்த முஸ்லீம்கள்.

1921ஞு படி 1000 க்கு ஆண்களில் 174 பேர்கள் பெண்களில் 15 பேர்கள் 1911 ஞு படி ஆண்கள் 166, பெண்கள் 11. 1901 ஞு படி ஆண்கள் 141, பெண்கள் 9,

### படித்த கிறிஸ்தவர்கள்.

1921ஞு படி 1000 க்கு ஆண்களில் படித்தவர்கள் 235 பெண்கள் 124. 1911ஞு படி ஆணகள் 226 பெண்கள் 106. 1901ஞு படி ஆண்கள் 198, பெண்கள் 91.(கல்வியில் இவர்கள்முன்னேற்றம் கவனிக்கத்தக்கது.)

1921ஞு த்திய சென்ஸஸ்படி நமது மாகாணத்தில் சிலஜாதியார்களில் 1000 க்கு படித்தவர்களின் விபரம்.

| ஜாதி. | ஆண். | பெண் |
|---|---|---|
| (தமிழ் தெலுங்கு முதலிய) பிராமணர்கள்... ... | 540, ... | ...130. |
| ஆனால், தமிழ்பிராமணர்கள்மட்டும் | ...715, ... | ...210. |
| கோமுட்டி... ... | 521, ... | ... 54. |
| நாயர்கள்(மலையாளம்) | 429, ... | ...143. |
| செட்டி... ... | ...395, ... | ... 22. |
| வாணியர்கள்... | ...298, ... | ... 20. |
| தமிழ்கம்மாளர்கள்... | 266 ... | ... 13. |
| தெலுங்கு ,, | ...276, ... | ... 25. |
| கைகோலர்கள் | ...265, ... | ... 19. |
| வெள்ளாளர்கள் | ...242, ... | ... 25. |
| தேவாங்கர்கள் | ... 248, ... | ... 16. |
| தீயர்கள் ... | ... 210, ... | ... 40. |
| அகமுடையர்கள்... | 208, ... | ... 8. |
| நாடார்கள் ... | ...200, ... | ... 15. |

## சின்னமனூர் க்ஷத்திரிய வித்தியாபிவிர்த்திசங்கம்.

திருவாளர் ரூ. கு. பழனிச்சாமிநாடாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் 22-12-22 மாலை 5 மணிக்கு இவ்வூர் மிஷன் பாடசாலையில் மேற்படி சங்கத்தின் 39-வது மீட்டிங்கூடிற்று. கடவுள்வணக்கத்துடன் வழக்கம்போல் சங்கநடபடிக்கைகள் ஆரம்பமாயிற்று. பல உபந்நியாசங்களும் நடைபெற்றது. அக்கிராசனரவர்கள் 'கடமை'என்பதை விஸ்தாரமாய் பேசி முடிவில் "இச்சங்கம்முதலாவது ஆண்டுநிறைவிழாசென்ற(3-11-22)ல் தீர்மானித்து முடிவுசெய்தபடிகுறிப்பிட்டுள்ளகாலத்தில் கனம் A. M. S. அண்ணாமலை நாடாரவர்களையும், கனம் T. கருப்பையா பிள்ளையவர்களையும் அழைத்து வெகு விமரிசையாய் நடத்துவீர்களென எதிர்பார்க்கிறேன்" என்றுகூறிமுடித்தார். இரவு சுமார் 9மணிக்கு பலத்தகரகோஷத்தினிடையே இனிது கூட்டம் கலைந்தது என்று ஸ்ரீமான் அ. மு. கு விஜயரத்தினசாமி நாடார் எழுதுகிறார்.

## கும்பகோணம்

### நாடார் மகாஜன சங்கம் எலிமெண்டரி பாடசாலையின் 2-வது ஆண்டு நிறைவு திருவிழா

1922ஞு டிசம்பர்மீ 30உ மாலை5மணிக்கு மேற்படி பாடசாலையில் மேற்படி வைபவம்நடைபெற்றது. அச்சமயம் வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள்கும்பகோணம்ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அவர்கள், கும்பகோணம் ஸ்கூல் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் அவர்கள், முனிஸிபல் கௌன்சிலர் வெங்கட்டராம நாயுடு அவர்கள் மேற்படி கௌன்ஸிலர் குப்புச்சாமி பிள்ளை அவர்கள், சுவாமிமலை அப்துல்லாகுதுத்தர்அவர்கள் மேலூர் பென்ஷன் ஆஸ்பத்திரி கந்தசாமி நாயக்கர் அவர்கள், கும்பகோணம் பனிக்கை V. ரத்தினசாமி நாடார் அவர்கள், K. நடராஜ நாடார் அவர்கள், M. சின்னையா நாடார் அவர்கள், மு. கோவிந்தசாமி நாடார அவர்கள், மேலக்காவேரி N. சேவுகப்பெருமாள் நாடார் அவர்கள், கும்பகோணம் S. கோபாலஸாமி நாடாரவர்கள், மேற்படி சங்கம் செக்ரடரி V. சொடலமுத்து நாடார் அவர்களும் இன்னும் அநேக பிரமுகர்களும் சுமார் 300 பேர் வரையில் குழுமியிருந்தார்கள். எதிர்பாராவே விஷயஞானியாயில் கண்டபடி மீட்டிங்கின் அக்ராசனாதிபதி ஜில்லா கல்விச்சபைத்தலைவர் ஸ்ரீமான் A. Y. பன்னீர்ச் செல்வம் பார் அட்லா அவர்கள் திடீரென அசௌக்கியத்தைப் பற்றி தனக்குள்ள வருத்தத்தையும் கூட்டம் இனிது நடைபெறும் விஷயத்திற்கு தனது அபிமானத்தையும் தெரிவித்து தந்தியும் லெட்டரும் அனுப்பியிருந்தபடியால் ஸ்கூல் சப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் P. K. பட்டாபிராம சாஸ்திரிகள் அவர்களே அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கும்படி முனிஸிபல் கௌன்சிலர் வெங்கட்ராம நாயுடு அவர்கள் பிரேரேபித்து குப்புசாமி பிள்ளை அவர்கள் ஆமோதித்து கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் சப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் அவர்கள் சபைத்தலைமை வகித்தார்கள். முதலில் கடவுள்வாழ்த்து ஸ்கூல்பிள்ளைகளால் இனிமையாய் பாடப்பட்டு மேற்படி பிள்ளைகளால் குமணச் சக்கரவர்த்தி கதையை நாடக ரூபமாக நடித்துக்காட்டப்பட்டது. நாடகம் முடிந்தவுடன் வருஷாந்திர ரிபோர்ட்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் ஞானலிங்கம் பிள்ளை அவர்களால் வாசிக்கப்பட்டது. ஸ்கூல் பிள்ளைகளில் ஏழைப்பிள்ளைகளுக்கு கும்பகோணம் நாடார் மகாஜன சங்கத்தாரால் வேஷ்டி, சிலேட்டு புஸ்தகம் முதலியவைகள் கொடுக்கப்பட்டு முடிந்ததும் பிரஸிடெண்டு அவர்களுக்கு சபையின்செக்ரட்டரியால் வந்தனோபசாரம்கூறிமாலை சூட்டப்பட்டு எல்லோருக்கும் சந்தனம், கற்கண்டு, தாம்பூலம்கொடுத்து இராஜவாழ்த்துப்பாடியவுடன்இனிது கூட்டம் முடிவுபெற்றது என்று நாடார் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான்ப.சொடலமுத்து நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## உலக விநோதங்கள்.

### மிகப் பெரிய ரெயில் வண்டித்தொடர்.

அமெரிக்காவில் மிகப் பெரியனவும் அற்புதமுமான வேலைகள் செய்யப்படுகின்றன வென்று நாம் கேள்விப்படுகின்றோம். சரி ரயில்வேய்க்கு 100 அடி நீளமுள்ள இஞ்சின் செய்யப்படுகின்றது அது 250 (போகி) பெரிய ரெயில் வண்டிகளை இழுத்துச் சென்றதென்றும் இவ்வாறு பூட்டப்பட்ட ரயில்வண்டித் தொடர் ஒன்றரை மைல் நீளமுடையதாயிருந்ததென்று தெரிகின்றது.

∴

### வயதும் அறிவும்.

ஓர் அமெரிக்க வைத்தியர் பல வருஷங்கள் 1700 பாலிய வகுப்புப்பிள்ளைகளை பரிசுத்திப் பார்த்ததில் 3-வது வயது முதல் இயற்கை யறிவு ஆரம்பித்து ஸ்திரீகளுக்கு 22-வயதிலும், புருஷர்களுக்கு 24-வயதிலும் பூர்த்தியடைவதாகக் கூறுகிறார்.

∴

### 8-கோடி

இங்கிலீஷ் ராஜ்யத்தில் தினந்தோறும் சுமார் 8-கோடி சுருட்டுகள் செலவாகின்றனவாம். சராசரி ஒரு மனிதன் ஒரு தினத்தில் 4 சுருட்டுகள் வீதம் உபயோகிக்கிறான். இந்த கணக்குப்படி இங்கிலீஷ் ராஜ்யத்தில் 100 டன்களுக்கு அதிகமான புகையிலை சிகரெட் ரூபமாகச்செலவாகிறதென்று தெரிகிறது, மேல் 8-கோடி சுருட்டுகளிலிருந்து ஏற்படும் புகையின் கணக்குத் தெரிய வில்லை.

∴

### டிமோகிரிடஸ்

இத்தத்துவ ஞானி தாம் எந்த ஸ்திரீயை நோக்கினாலும் அவள்மீது காதல் உண்டாவதால் தம் கண்களைக் கெடுத்துக் கொண்டார். (குருடாக்கிக்கொண்டார்)

∴

### லெப்பார்டி.

லெப்பார்டி என்பவர் பகலை இரவாகவும் இரவைப் பகலாகவுஞ் செய்து கொண்டாராம்.

∴

### விம்மர்மான்.

விம்மர்மான் என்பவர் வேண்டுமென்றே பட்டினியிருந்து மரணமானார். காரணமென்ன வென்றால், சாப்பாட்டுக்குக் கொடுக்கப் பணமில்லை யென்ற அபிப்பிராயத்தை அவர் உறுதியாக வைத்துக் கொண்டார்.

∴

### சோப்பின்.

சோப்பின் என்பவர் தாம் அருமையாகக் காதலித்த மாதைக் கைவிட்டு விட்டார். காரணமென்ன வென்றால் தம் காதலி தமக்கு நாற்காலி வழங்குவதற்கு முன்னே அதை மற்றவர்க்கு வழங்கியதேயாகும்.

∴

### பாடிலேர்.

பாடிலேர் என்பவர் தாம் எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்ட ஒரு புத்தகத்தை எழுதிமுடிக்கும் வரையில் தம்மை ஆதரிக்கும்படி ஒரு நண்பரை வேண்டிக் கொண்டார். ஆனால் எழுதக் குறித்த புஸ்தகத்துக்கு யாதொருசம்பந்தமுமில்லாத விஷயத்தைப் படிப்பதில் தாம் காலத்தை வீணாகக்கழித்தார். இவர் அடிக்கடியும் புத்தகமெழுத எண்ணி எண்ணி அதை எழுதவாகும் மணிநேரத்தையும் தம் கடன்களைத் தீர்ப்பதற்குப் போதிய வரிகளையும் கணக்கெண்ணுவார். அவ்வளவுதான். ஒரு மாதமோ இரண்டுமாதமோ கழிந்துவிடும். புத்தகத்தை மாத்திரம் ஆரம்பிக்கமாட்டார்.

∴

### அகஸ்டி கோம்டி.

ஸ்திரீகள் ஒரு காலத்தில் புருஷனின்றியே கர்ப்பந்தரித்துப் பிள்ளை பெறுவார்களென்று தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்.

∴

### போடிரா.

இவர் ஐம்பது வயதினராயிருந்த போது தமக்கெதிராக வசித்திருந்த ஒரு பெண்ணிடத்துப் பெருங்காதல் கொண்டார். ஒரு நாள் தெருவில் நிற்குஞ் சமயம் அவ்வழகிய பெண்ணை இன்பத்தோடு கூர்ந்து நோக்கினார். அந்தப் பெண் தனக்கு விருப்பமில்லாத கிழவராகிய அவரை விட்டு நீக்கவேண்டி, அழுக்கு நீர் நிரம்பிய ஒரு பானையை அவர் தலையில் போட்டுடைத்தாள். பொடிரா தம்மீது அன்புகொண்டு அவள் அப்படிச் செய்ததாகக் கொண்டு மிகுந்த சந்தோஷத்தோடு வீட்டுக்குச் சென்றார்.

த. க. ம.

## குடும்ப ஔஷதங்கள்.

(அநுபவமுறை)

### காதுநோய் நீங்குவதற்கு.

ஒருபிடி மிளகாய் வற்றலை இரண்டுபடி ஜலத்தில் கஷாயம்போட்டு கால்படியாக வற்றவைத்து மேற்படி மிளகாயை மத்திலால் பிசைந்து கொள்ளவும். பிறகு அந்த மிளகாயையும் தண்ணீரையும் ஒரு துணியில் போட்டுப் பிழிந்து கொள்ளவும். அந்தக் கஷாயத்தில் அரையவுன்ஸ் தேங்காய் எண்ணெய் கிடைக்கக்கூடிய தேங்காய்ப் பாலை சேர்த்துக்கொண்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி அது எண்ணெய்ப் பக்குவத்தில் வரும்பொழுது வடிகட்டி "கால்வராகனெடை-ஓமத்தையும், அரைக்கால் வராகனெடை சட்டிச் சூடத்தையும் பொடிந்து முன்னமே தயாரித்து வைத்துக்கொண்டிருக்கிற" ஒரு தாம்பாத்திரத்தில் விடவேண்டும். பிறகு அதை ஒரு சீசாவில் எடுத்து வைத்துக் கொள்ளவும். வேண்டும்பொழுது அதில் கொஞ்சம் எடுத்து சூடாக்கி இளஞ்சூட்டில் 5,6 துள்ளிகள் காதுக்குள் விட்டுப் பஞ்சியினால் அடைத்து வந்தால் காது கேளாமற் போதல், காதுவலி இவை நீங்குவதோடு காது திட்பமாகவும் கேட்கும்.

* * *

### கண் நோய் நீங்க.

இந்துப்பும் கடுக்காய் விதையும் சேர்த்து வெண்ணெயில் வெண்ணெபோல் அரைத்து ஒரு செம்புப் பாத்திரத்தில் அப்பி வைத்திருந்தால் அது நன்றாகக்களிம்பாகும். களிம்பானபொழுது அதை ஒரு கொம்புச் சிமிழில் எடுத்துவைத்துக் கொள்ள வேண்டும். அதிலிருந்தும் அரைக்குன்றிமணி எடை வீதம் எடுத்துக் கண்ணில் தீட்டிவந்தால் புளித்த கண்ணும், நீர்வடிகின்ற கண்ணும் அந்தநோய்கள் நீங்கி நல்ல கண்களாகும். பிரகாசம் அதிகரிக்கும்.

* * *

### உரோமம் முளையாத இடத்தில் உரோமம் செழிமையா யுண்டாக.

குக்கிலின் பஸ்மத்தை ஒலிவ் எண்ணெயில் கலக்கித் தேய்த்தால் ரோமமில்லாத இடத்திலும் உரோமம் வளரும். உரோமம் தடித்து வளர்வதற்கு இது நல்லவழி.

* * *

### புண்கள் ஆறுவதற்கு.

இரண்டு ரூபாஎடை பசுவின் வெண்ணெயை சுத்த ஜலத்தில் நூறுதரம் சுத்தி செய்து, அத்துடன் அரைரூபாய் எடை சந்தனத் தைலம் சேர்த்து, தடவினால் எத்தகைய ரணமும் (புண்ணும்) ஆறும்.

* * *

### தலைவலி நீங்க.

அரைக்கால்படி நல்லெண்ணெயில்கற்பூரம் ஒரு ரூபா எடையும், சந்தனத்தைலம் ஒருரூபாய் எடையும், கருவாப்பட்டைத் தைலம் ஒருரூபா எடையும் சேர்த்துத் தடவினால் தலைநோய் முற்றிலும் நீங்கும்.

* * *

### செவிவேதனை நீங்க.

5-ரூபாஎடை கடுகெண்ணெயும், 5-ரூபாஎடை கோமூத்திரமும், 5-ரூபாஎடை முள்ளங்கிச் சாரும் சேர்த்து அடுப்பிலிட்டுச் சிறுதீயில் கொதிக்க வைக்கவும். ஜலசத்து முழுதும் நீங்கி ஆவியாகும்வரை அவ்விதஞ் செய்யவும். எண்ணெய் மட்டும் மீந்திருப்பதாகத் தெரியும்பொழுது அதனை எடுத்து ஆற்றி சீசாவிலிட்டு அடைத்து வைத்துக்கொள்ளவும். எவ்விதமான செவி நோய்களுக்கும் இது நல்ல மருந்து. இதில் இரண்டு மூன்று துள்ளி விட்டாற் போதும். சுகம் தரும்.

* * *

### ஆயுளை வளர்க்கும் மருந்து.

பாலுக்கு 6 பங்கு தண்ணீர் சேர்த்து, பால் வற்றாமலும் தண்ணீர் வற்றும் படிக்கும் செய்து போதுமான சர்க்கரை சேர்த்துப் பருகி வர ஆயுளும் ஆரோக்கியமும் விருத்தியாகும். இது அமுதத்துக்கொப்பான மருந்து.

அகஸ்தியன்.

## உலகத்தில் எண்ணெய் வித்து வியாபாரம்.

### இந்தியாவின் பங்கு.

| வித்துகள். | அனேகம் தேசங்களிலிருந்து மொத்த ஏற்றுமதி | இந்தியாவிலிருந்து ஏற்றுமதி (1913—14) | நூற்றுக்கு |
|---|---|---|---|
| | டன் | டன் | |
| ஆளிவிதை ... | 1,808,000 | 414,000 | 23 |
| வேர்க்கடலை ... | 779,000 | 361,000 * | 46 |
| பருத்திக்கொட்டை ... | 858,000 | 284,000 | 33 |
| ரேப் கடுகு ... | 385,000 | 254,000 | 66 |
| முத்துக்கொட்டை ... | 135,000 | 135,000 | 100 |
| எள்ளு ... | 264,000 | 112,000 | 42 |
| கொப்பரை ... | 537,000 | 38,000 | 7 |
| இலுப்பை ... | 33,000 | 33,000 | 100 |
| பேயெள்ளு ... | 4000 | 4000 | 100 |

* புதுச்சேரியிலிருந்து ஏற்றுமதியானது உள்பட

எண்ணெய் வித்துக்களில் அநேகம் இந்தியாவில் ஏராளமாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. அநேகமாய் ஐரோப்பா கண்டத்து தேசங்களே இவ்வித்துக்களை பல தொழில்களுக்காக வாங்குகிறார்கள். தற்காலம் இந்தியாவிலிருந்து எண்ணெய் வித்துக்களையே ஏற்றுமதி செய்கிறார்கள். இதனால் நம் நாட்டுக்கு இவ்வித்துக்களிலிருக்கும் பிண்ணாக்கு உபயோகப்படுகிறதில்லை. நம் நாட்டிலேயே எண்ணெயைப் பிழிந்து பிண்ணாக்கை நிறுத்தி எண்ணெயைமாத்திரம் ஏற்றுமதி செய்வதுதான் உசிதமானது.

தவிர, முத்துக்கொட்டை, இலுப்பை, பேயெள்ளு முதலிய வித்துச்செடிகள் இந்தியாவிலேயே விளைகின்றன. இதர தேசங்களில் பயிரிடப்படுகிறதில்லையென்பது மேலிருக்கும் அட்டவணையிலிருந்து ஏற்படும். ஆகையால் இம்மூன்று வித்துக்களையும் ஏராளமாய்ப் பயிரிட்டால், நல்ல இலாபம் கிடைக்கும். சென்ற வருஷத்தில் முத்துக்கொட்டை பயிரிடப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் அதன் முன் வருஷத்தைக் காட்டிலும் குறைந்து விட்டது. தென்னிந்தியாவில் சேலம், கோயமுத்தூர், திருச்சி, மதுரை முதலிய ஜில்லாக்களிலேயே அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. இச்சில்லாக்களில் முத்துக்கொட்டைக்கு வேண்டிய சௌகரியங்கள் பொருந்தியிருக்கின்றன வென்று நாம் சொல்லாமலே விளங்கும். ஆகாயவிமானங்களின் இயந்திரங்களின் பாகங்களை வழவழப்பாக்க விளக்கெண்ணெயை உபயோகிக்கிறார்கள். இதர எண்ணெகள் அதிக குளிர்ச்சியால் தோய்ந்து போகின்றனவாம். விளக்கெண்ணெ மாத்திரமே திரவரூபமாகவே இருக்கிறதாம்.

அநேக கிராமங்களில் இலுப்பமரங்கள் பல விருக்கின்றன. தற்காலம் இவைகளின் புஷ்பங்களைப் பொருக்கி எளிய ஜனங்கள் புசிக்கிறார்கள். விதையிலிருந்தும் எண்ணெ பிழியப்பட்டு எண்ணெயை பலகாரஞ்செய்ய கிராமாந்திரங்களில் உபயோகிக்கிறார்கள். பிண்ணாக்கை அரப்பாகவும் எருவாகவும் உபயோகிக்கிறார்கள். இம்மாதிரி உபயோகிக்கப்படுவது அதிகமில்லை. பாக்கியெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாய் விடுகிறது ஆனால் இவ்வளவு கொட்டைகள் கிடைக்குமோ அவ்வளவையும் சேகரித்து எண்ணெயைப் பிரித்து பிண்ணாக்கை நிறுத்திக்கொண்டு எண்ணெயை ஏற்றுமதி செய்தால்தான் நலம். இலுப்பமரம் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் கிருஷிகன் இக்கொட்டையைப் பொருக்கி எண்ணெ ஆட்டஏற்பாடுசெய்வார்களானால் இத்தொழிலினால் பொருளாதாரம் அதிகரிக்கும்.

கிருஷிக மித்திரன்.

## நமது மித்திரன் போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை, நீலநூல் வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோதவிகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ. சேண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானூடு தண்டுப்பத்து, மிராஸ்தார் ஸ்ரீமான் சோ செல்லத்துரை நாடார்

ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ் 26-நிர் நாரீஸ்ரோடு கொழும்பு.

ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார் திருப்பாப்பு நாடார்விளை திருநெல்வேலி ஜில்லா, (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் வே. சுடலைமாடநாடார், சிறுநாடன் குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் நா ஆறுமுகநயினார் நாடார், பெரியகண்டம்வடலி திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார் உடையார்குளம் திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection